# சுவைத்திரள்

சுவை : 1 ★ 1994 ஜனவரி ★ திரள் : 4 விலை 10/-





**பொங்குமோ இந்தப் பொங்கல்**

காட்டு வழியிலே விறகு பொறுக்கி
காடு படர்ந்த களனியினைக் கவலையுடன் நோக்கி
கிளாலி வள்ளத்தில் வந்தானா மகன் எனப்
பெருங்கவலை கொண்டு
அகதி அரிசியிலே பாலும் இட்டு
பொங்குகின்றோம் பொங்கல் இன்று
பொங்குமா இந்தப் பொங்கல்

\- கல்லடிக் கதிர்காமு -

**பொங்குமா இந்தப் பொங்கல்**

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
அகதிப் பணம் வந்தது என்று......
கனடா டொலரிலே அரிசி வாங்கி
பிரிட்டிஸ் பவுணிலே வெல்லம் இட்டு
பிரான்ஸ் பிராங்கிலே கஜூவும் இட்டு
குவைத் தினாரிலே புதுப்பானை வாங்கி
பொங்கிடுவோம் இந்தப் பொங்கல்......

நாம் வசிக்கும் 'Flat' லே முத்தம் ஏது?
'காஸ்' அடுப்பில் சட்டி வைத்து
பாசுமதி அரிசியிலே பாலும் இட்டு
பொங்கிடுவோம் இந்தப் பொங்கல்......
தமிழினமே வாழி... வாழி...

\- வலையிறவுக் கவிராயர் -

**மீன்பாடும் தேன்நாட்டின் நகைச்சுவை பல்கலை ஏடு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலே இருப்பவர் கடவுள்......
கடவுளின் ஸ்தானத்தில் இருப்பவர் டாக்டர்!

↓

செங்கலடியில் கடமை, கண்ணியம் கட்டுப்பாடு நிறைந்த தனியார் ஆஸ்பத்திரி ----

## சிவா பார்மஸி

இல. 01, திருமலை வீதி,
செங்கலடி.

★ சகல, மருந்து நிறுவனங்களின் மருந்துகளும் உரிய விலையில் எம்மிடம் விற்பனைக்கு உண்டு.

*உரிமையாளர்:-*
டாக்டர்: S. சுந்தரலிங்கம்

## ஈஸ்வரி ஸ்ரோர்ஸ்

சகலவித பலசரக்குப் பொருட்களுக்கு சிரிப்புச் சஞ்சிகை சுவைத்திரளுக்கும் நகரில் நாடவேண்டிய வியாபார நிலையம்

↓

## ஈஸ்வரி ஸ்ரோர்ஸ்

இல. 10, பஜார் வீதி,
மட்டக்களப்பு.

*உரிமையாளர்:*
க. முருகேசு

ஆள் பாதி! ஆடை பாதி என்பது தமிழ்ப் பழமொழி
நளமகாராஜா போட்டிருந்த மேலாடை பாடலில் இடம் பெற்றுள்ளது;
அழகுக்கு அழகு தரும் அத்தனை ஆடைகளும் செங்கலடியில்
ஒரு கடையில் உள்ளது.



" அது எங்கே அண்ணை
" அது ரகசியம் சொல்லமாட்டேன்
" சொல்லு ...
" ஆம் அதுவே ...

## அம்பிகா டெக்ஸ்

இலக்கம் 294, மெயின் வீதி,
செங்கலடி.

★ அழகுக்கு அழகு தரும் ஆடைகள்

★ சேர்ட்டிங்---- சூட்டிங், ★ சாறிகள், ★ சிறுவர் உடைகள்
மற்றும் யாவற்றுக்கும் ஜவுளி சமுத்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுவைத்திரள்

## பேசுவதும் போராட்டம் தான்! மௌனமாக இருப்பது ஏன்?

பேசிய பேச்சுக்கு நீ எஜமான், பேசாத பேச்சுக்குப் பேச்சு எஜமான். இவ்வாறு ஆபிரகாம் லிங்கன் சொன்னார். பேச்சே பெரும் பிரச்சனைகளைப் பல சமயங்களில் முடிவுக்குக் கொண்டுவரும் முக்கிய காரணியாக விளங்கும். பிரிட்டிஸ் ஆட்சிக் காலத்தில் சேர். பொன். அருணாசலம் அவர்களின் பேச்சைக் கேட்டு அவரைப் பல சமயங்களில் அபாய கரமானமான (Dangerous Terrorist) பயங்கரவாதி எனப் பிரிட்டிஸ் ஏகாதிபத்தியம் கூறியது. அன்று தொடங்கி இன்றுவரை முறையே சட்டசபையிலும், சுதந்திரம் அடைந்த பாராளுமன்றத்திலும் தமிழ்ப் பா. உக்கள் சிறந்த நாவன்மை கொண்டவர்களாகத் திகழ்ந்தார்கள். சேர் பொன் ராமநாதன், சேர் அருணாசலம், திரு மகாதேவா, திரு ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு செ. சுந்தரலிங்கம், திரு வன்னியசிங்கம், திரு அ. அமிர்தலிங்கம், திரு பொன் கந்தையா, திரு எம் சிவசிதம்பரம் என இப்பட்டியல் நீண்டு செல்லும்.

அவர்களின் நாவன்மை கண்டு ஜே, ஆர் அவர்களே பல இடங்களில் வியந்து போனார். பாராளுமன்றத்தில் இனவாதம் பேசிய பெரும்பான்மை இன அரசியல் வாதிகள் இவர்களின் பேச்சாற்றல் முன்பு நின்று பிடிக்க முடியாது போனதும் பழைய கதைகள்.

தமிழ் மக்கள் தமது உரிமையைப் பல்வேறு கோணங்களில் போராடி வென்றெடுக்க முயற்சி செய்கின்றார்கள். இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாகியும் ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் இறந்தும் இப்பிரச்சனை பல்வேறு பரிணாம நிலைகளையே அடைகின்றது. ஆனால் பிரச்சனை தீர்ந்தபாடாக இல்லை.

தமிழ் மக்கள் சிலுவை சுமக்கின்றார்கள். அகதி முகாம்களிலும், குளிர் உறைந்த நாடுகளிலும் முறையே அகதிப் பொருட்களும், டாலர்ப் பிச்சையும் எடுக்கின்றார்கள், நாம் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் மூலம் தெரிவு செய்த பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் என்ன செய்கின்றார்கள்! வரலாற்றை நிமிர்த்தக் கூடிய அளவுக்கோ உலகம் காது கொடுத்துக் கேட்கக் கூடிய அளவுக்கோ, இவர்களின் பாராளுமன்ற உரைகள் இல்லை. இந்தியாவில் டயர் என்ற தேசாதிபதி இந்தியாவின் ஜாலியன் வாலாப் படுகொலை செய்தபோது அதனை எதிர்த்து எட்மண்ட் பேர்க் என்பவர் பேசிய உரைகள் வரலாற்றில் இருந்து என்றுமே அழிந்து போகாதவை. தமிழ் மக்களும் மதக் கோயில்களும், அதன் உள்ளே மக்களும், குண்டு வீச்சு விமானங்களால் பலியாகும் போது கூட எமது பா. உக்களின் பலவீனமான குரல் தான் கேட்கின்றது. இடி முழக்கம் போன்ற குரல்கள் வெளிவருவதில்லை.



தமிழ்ப் பா. உக்களில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரைத் தவிர மற்றவர்கள் பேச்சில் அக்கறை எடுப்பதில்லை. கேள்வி நேரத்தில் அவர்கள் பேச வேண்டிய நேரங்கள் மிஞ்சிக்கிடக்கின்றன. பேச வேண்டிய விசயங்கள் தூங்கிக் கிடக்கின்றன!

(தொடர்ச்சி 19ம் பக்கம் )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வி: கலாபரணி கொழும்பு

கே: நாம் எதுவரை முன்னேற மாட்டோம்?
ப: உள்நாட்டுச் சேவல் கூவும் நேரம் வெளிநாட்டுச் சுவர் மணிக்கூட்டைப் பார்க்கும் நிலைவரை நாம் முன்னேற மாட்டோம்.

✳

ரி: நந்தகுமாரி தெகிவளை

கே: சுவீப் விழுவதற்கான ஆலோசனைகள் சொல்ப வரை நம்பலாமா?

ப: அவரின் ஆலோசனையின்படி, அவருக்கே முதல் பரிசு விழச் செய்யுமாறு வற்புறுத்தவும். அடியடா புறப்படலையிலை......

✳

க: அன்புராஜ் வந்தாறுமூலை

கே: மட்டக்களப்பில் பிடித்தது எது? பிடியாதது எது?

ப: பிடித்தது கஜு; பிடிக்காதது கிசு.... கிசு......

✳

ஆ: தங்கன் மெயின் வீதி, மட்டக்களப்பு.

கே: அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்?

ப: அன்புக்கு அடைக்கும் தாள் இருந்தால் அகதி முகாம்களில் பிள்ளைகள் பிறப்பார்களா?

✳

க: மயிலநாதன் சித்தாண்டி

கே: சங்கீதம் அறிந்த பெண்ணை இசைஞானம் அறியாதவன் கல்யாணம் செய்தால்?

ப: சந்தேகப் பூ மலரும்

க. அருந்தவன் கல்லாறு

கே: வாழ்க்கையில் இலட்சியம் எதுவும் இன்றி வாழ்வோர் எதனைக் கண்டார்கள்?

ப: சூரியோதயத்தையும், சூரிய அஸ்தமனத்தையும் கண்டார்கள்

✳

ஒரு சமய பக்தன் (விலாசம் இல்லை)

கே: அர்த்தம் உள்ள இந்து மதத்துக்கு நாம் செய்த சேவை என்ன?

ப: ''மாட்டிறைச்சி'' சாப்பிடாதீர் என அமெரிக்க இந்துத் துறவி தந்திரதேவா சொல்லும் அளவுக்குச் சேவை நடந்துள்ளது

✳

க. இஸ்மாயில் ஒட்டமாவடி

கே: குவைற் ஆக்கிரமிப்புக்கு அமெரிக்கா கண்ணீர் வடித்தது ஏன்? பொஸ்னியாவில் கண்ணீர் வடியாதது ஏன்?

ப: குவைற்றில் தலையிட்டமைக்குக் காரணம் எண்ணெய்க் கண்ணீர்.
பொஸ்னியாவில் தலையிடாமைக்குக் காரணம் முஸ்லீம் கண்ணீர்

✳

ரி. சின்னத்துரை கொழும்பு - 05

கே: கொழும்பில் வாடகைக்கு இருப்போரை முதலாளிமார் அடிக்கடி குடி எழுப்புவது எதற்காக?

ப: புதிது, புதிதாக ஆட்கள் வந்தால்தான் ஏமாற்றிப் பிழைப்பது சுலபம் என்பது அவர்களின் கணித அலகு.

✳

டாக்டர் காராளசிங்கம் வாழைச்சேனை

கே: தற்கொலைக்கு இலங்கை இரண்டாம் இடம் வகிக்கின்றது. நுளம்புத் திரிச் சாம்பலும், முள்ளுக் கம்பியும் கலந்த கசிப்பைக் குடித்த பின்பு மனைவியைக் கணவன் அடிக்கிறான். அவள் தற்கொலை செய்கிறாள். இதை மாற்ற வழி என்ன?

ப: நாட்டின் நாணயத்தில் ஆணி செய்தவர்கள் எமது மக்கள்! எனவே கசிப்பைக் குடியாது விடின் கசிப்பு வடிப்பவர்கள் கலைந்து போவார்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு. தங்கநாதன் களுவாஞ்சிக்குடி

கே: ஜப்பானியருக்கும் எமக்கும் என்ன வித்தியாசம்

ப: நாம் வானவில்லிற்கும் இராமர் வில்லிற்கும் கவி பாடுகின்றோம். அவர்கள் வானவில் நிறங்களில் எமக்குச் 'சாறி' நெசவுசெய்து அனுப்புகின்றார்கள்.

✻

ஏ. கமலநாதன் வவுனியா

கே: மனிதனுக்கும் மிருகத்துக்கும் என்ன வித்தியாசம்?



ப: மிருகம் சிகரெட் குடிப்பது இல்லை

✻

K. சந்திராணி வலையிறவு

கே: தலைவன் என்றால் எப்படி இருக்க வேண்டும்

ப: நீதிக்கு அவர் தலை வணங்க வேண்டாம். அவர் செயலால் நீதி அவருக்குத் தலை வணங்க வேண்டும்.

✻

மு. நாயகபாலன் கொட்டாஞ்சேனை

கே: தீர்க்க முடியாத பிரச்சனையைத் தீர்ப்பது எப்படி?

ப: விசாரணைக் கமிஷன் அமைக்கலாம்.

✻

த. அன்பரசன் ஆரையம்பதி

கே: இலங்கையின் உள்நாட்டுப் போர் முனை எப்படி உள்ளது?

ப: பூநகரியில் தாக்குதல் நடந்தால் யாழ்ப்பாணக் கச்சேரியில் குண்டு விழும்.

✻

மு. தன்பாலன் கல்லடி

கே: சமுதாயத்தில் பலவீனப்பட்டோரை நசுக்குபவர்களை மன்னிக்கலாமா?



ப: இடியுடன் கூடிய மின்னலைக் ''கூலிங் கிளாஸ்'' போட்டு ரசிக்கலாமா?

த. பாலன் வெள்ளவத்தை

கே: ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என்றால் என்ன அர்த்தம்?

ப: இரண்டுநாள் கஷ்டப்பட்டு உழைத்தால் ஒருநாள் பெண்டாட்டியுடன் சமாதானமாக வாழலாம் என்பதே!

✻

அ. குமார் பெரியகல்லாறு

கே: உமக்கு எந்த மதம் பிடிக்கும்? எந்த மதம் பிடியாது?




ப: எனக்கு எல்லா மதமும் பிடிக்கும். ஆனால் சர்வமதக் குழறல்கள் எனக்குப் பிடிக்காது.

✻

க. எழிலரசி லோவர் வீதி, பதுளை

கே: கொழும்பு தொழில் முன்னேற்றம் கண்டுள்ளதா?

ப: ஹா..... ஹா..... ' டூப்ளிக்கேட் ' திறப்புச் செய்வதில் முன்னேற்றம் கண்டுள்ளார்கள்

✻

மு. தாரணி யாழ்நகர்

கே: கொக்கு ஒற்றைக் காலைத் தூக்குவது ஏன்?

ப: மூளை பலம் உள்ளவர்கட்கு ஒரு கால் சாதனை செய்யும் என்பதைக் காட்ட!

✻

கவிஞர் கன்னையா ஓயார் சின்னக்குளம், வவுனியா
( 2 கேள்விகள் )

கே: சிவபூசையில் கரடி புகுந்தால்?

ப: பூசையில் கரடி மாத்திரம் நிற்கும். மூலஸ்தானத்தில் ஐயர் கதவைப் பூட்டி விட்டு நிற்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கே: உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடலாமா?

ப: ஊர்வாயை மூடினால் உலைவாய் தம்பி...... உலைவாயை மூட ஒரு மூடி காணும். ஊர் வாயை மூட அம்மாடி......

✻

க. வினோதன் கிரிலப்பனை

கே: இன்று பெண்ணா, பொன்னா முக்கியம்

ப: பொன்னு உள்ள பொண்ணு

✻

---

க. வினோதன் கோட்டைக்கல்லாறு

கே: பேய் இருப்பது உண்மையா?

ப: Boy நீ ஒரு பேய் !

---

கே: உமக்கு அடுத்த ஆண்டில் தமிழ்மணி பட்டம் சிபார்சு செய்கிறேன் ஏற்பீரா?

ப: தமிழ் என்னுடன் உள்ளது. Money இல்லை. அனுப்பி வைத்தால் ஏற்பேன்

✻

வீ. சொக்கலிங்கம் கொழும்பு - 03

கே: நாம் ஏன் பிறந்தோம்?

ப: வாடகை, கப்பம் என்பன ஒழுங்காகக் கட்ட!

✻

சா. தம்பிமுத்து வவுனியா

கே: கொழும்பில் தமிழர்கள் என்ன செய்து கொண்டு இருக்கிறார்கள்?

ப: பிரான்ஸ், இங்கிலாந்து, கனடா போன்ற உலக நாடுகளுக்குக் கரியமலவாயு அனுப்பிக் கொண் டிருக்கிறார்கள்.

✻

த. லிங்கநாதன் படுவான்கரை

கே: உண்மையான கஞ்சனைக் கண்டு பிடிப்பது எப்படி?

ப: அவன் சீதனம் கொடுப்பான். பிச்சை கொடுக்க மாட்டான்.

✻

க. அன்பழகன் வாழைச்சேனை

கே: கொழும்பில் உமக்குப் பிடித்தது எது? பிடியாதது எது?

ப: பிடித்தது வேல்விழா. பிடியாதது அம்புலன்ஸ் அலறும் சத்தம்

க. தர்மநாதன் ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு.

கே: கொழும்பில் தமிழ் மக்கள் குவிந்து வருவதாக அரசியல்வாதிகள் ஆலாபனை செய்வது ஏன்?

ப: கொழும்புத் திர்ப்பே தீர்ப்பு; மற்றெல்லாம் செழும்புத் தீர்ப்பு என்கின்றார்கள்

✻

கே: இன்று எந்தத் தாய் கொடுத்து வைத்தவள்? எந்தத் தாய் கொடுத்து வைக்காதவள்?

ப: கனடாவுக்குப் பிள்ளையை அனுப்பியவள் கொடுத்து வைத்தவள். நித்திரையால் எழும்ப முன்பு 'சுப்பர்சோனிக்' கால் கொல்லப்பட்ட பிள்ளையின் தாய் கொடுத்து வைக்காதவள்.

---

போர் ! போர் ! ! போர் ! ! !
எப்போ போர் ஓய்வு ? ...... !
அம்மா, அப்பா போர்
அண்ணன் தம்பி, போர்
அயலிலும், ஊரிலும் போர்
எதிலும் எங்கும் போர்
இப்படியான மனிதனை
ஆண்டவன் போர்க்களத்தில்
விட்டு விட்டான்
இப்போ அவன் ஆளை ஆளைப்
பார்த்து முழிக்கிறான்
நம்மில் போர் ஓய்ந்தால்
நாட்டிலும் போர் ஓயும்

- மட்டூர்ராம்

---

**யாரோ சொன்னவை**

இன்று இருப்போர் நாளை இல்லை என வேதாந்தம் பேசுவோர் இன்று இல்லாதோர் நாளை வருவர் என்பதையும் உணர வேண்டும்.

---

ஆசிரியர்: காந்தி யாரால் எப்போது கொலை செய்யப்பட்டார்?

மாணவன்: மகாத்மா காந்தியா
இந்திரா காந்தியா?
ராஜீவ் காந்தியா?

ஆசிரியர்: ? ? ?

கில்லாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கே சிரியுங்கள்



செல்லமாக வளர்த்த எலியை அறையொன்றில் பூட்டி வைத்து விட்டு வேறிடம் சென்ற பெண்ணுக்கு 120 டாலர் அபராதம் செலுத்த நீதிமன்றம் உத்தர விட்டது. இவ்வருடம் யூன் மாதம் இந்தச் சம்பவம் லண்டனில் நடைபெற்றது.

( ராய்ட்டர் )

வீட்டு வேலைக்காரியாக ஒரு சிறுமியைக் கடத்தி வந்து, நாய் கட்டும் சங்கிலியால் பூட்டிவைத்த தாகவும் நாய்களுக்குச் சாப்பாடு வைக்கும் கோப் பையில் அவருக்கு சாப்பாடு வைக்கப்பட்டதாகவும் ஒரு வழக்கு இலங்கையில் உள்ள நீதிமன்றம் ஒன்றில் நடைபெற்று வருகின்றது. (எலியின் மதிப்பைக் கூட நீதிமன்றங்களில் மனிதருக்குக் கொடுத்தால் பரவா யில்லை என்கின்றார் அனுதாபி. ஒருவர் )

பீட்டர் டெக் ஒரு நகைச்சுவை எழுத்தாளர் பஸ் வண்டிக்காக காத்து நின்று களைத்துப் போனவர் அவர்.- எனவே தான் எழுதிய நூல் ஒன்றில் நகைச் சுவையாகப் '' பஸ்ஸிற்காக நீண்டகாலம் காத்துக் கொண்டிருக்க வேண்டும். சில சமயம் அவை கிடைக் காமல் போய் விடும், பஸ் பிடிப்பது என்றால் அது பெண்கள் கொடுத்த முத்தத்திற்குச் சமமானது''

ஆசிரியர்: பிள்ளைகளே டாக்டர் ஆவது கஷ்டம்; அதன்பின் கடமையாற்று வதுசுலபம்; சட்டத்தரணி ஆவது கஷ்டம்; வழக்குப் பேசுவது சுலபம்

( ஒரு மாணவனின் குரல் )

ஆசிரியராவது கஷ்டம்' படிப்பிப்பது சுலபம்

ஆசிரியர்: ? ? ?

## தமிழர்கள் கட்டிய வீடு

க . சி ஆர் . டி . சில்வா என்பவர். ஒரு வரலாற்று ஆய்வாளர், தமிழர்கள் பற்றி தமிழர்களின் ஆரம் பம் என்ற நூலில் பின்வருமாறு எழுதியுள்ளார். ''இலங்கையில் தமிழர்கள், சிங்களவர்கள் வருவதற்கு முன்னரே இருந்திருக்கின்றனர். ஆனால் கிடைத் துள்ள தகவல்களின் படி சுமார் 100 வருடங்களின் பின் அதாவது சிங்களவர் களின் பின்புதான் அவர் கள் வீடு மனைகளைக் கட்டினார்கள்''

## மட்டக்களப்பு பஸ் ஸ்ராண்ட்:-

ஒருவர்:- தமிழ்மொழிக் கொலைகள் நாட்டில் மலிந்து வருகின்றன.!

மற்றவர்:- மீன்பாடும் தேன்நாட்டில் இல்லையா? பண்முனையை மன்முனை எண்டு எழுதிறாங்கள். களுவாஞ்சிக்குடியை களுவான் சிக்குடி எண்டு எழுதி வைச்சிருக்கிறாங்களே........

ஒருவர், ? ? ?

## தலையோடு வந்தது கூந்தலோடு போச்சு,

(பாணந்துறையில் கூ. மொ- விற்பனை நிலையம் ஒன்றில் வேலை செய்யும் ஒரு பெண்ணின் கூந்தலை அவளின் வீட்டில் வைத்தே சிலர் வெட்டிச் சென்றனர். இவ்வாறு அப்பெண் பொலிஸில் முறைப் பாடு செய்துள்ளாள். வீரகேசரி 3/9/93 அப்பெண் அதிர்ஷ்டசாலி தலையோடு வந்தது கூந்தலோடு போச்சு!

## அப்பாடா வந்ததே சிரிப்பு !

மட்டக்களப்புக் கச்சேரிக்குப் பிறப்புச் சேட்டிபிக்கற் எடுக்க வந்த ஒருவர் கடைசி யாகச் சொன்னது.

''பிள்ளை பெறுவது சுகமானது; இந்தக் கச்சேரியில் பிறப்புச் சேட்டிபிக்கற் எடுப்பது கஷ்டமானது''

- யாரோ -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தவறு அறிய இரண்டு மாதம்

பிரபல எழுத்தாளர் திரு திமிலை மகாலிங்கம் அவர்களின் 'புள்ளிப் புள்ளி மானே' என்ற சிறுவர் இலக்கியத்துக்கு சாகித்தியப் பரிசில் கிடைத்ததாக 30 - 06 - 93ல் அறிவிக்கப்பட்டது. இது தவறு என இந்து சமய கலாச்சார அமைச்சு 03. 09. 93 அன்று அறிவித்தது. இத்தவறைக் கண்டுபிடிக்க 63 நாட்கள் எடுத்ததற்காக இது கின்னஸ் புத்தகத்தில் ஏன் இடம்பெறக் கூடாது என 'சுவைத்திரள்' ஆபிஸ் பையன் கேட்கின்றான்.

எமக்கு ஒருநாள் பொழுது போக வில்லை மீசையை முறுக்கிக்கொண்டு இருந்தோம்! இந்த நேரம் பார்த்து 76ம் ஆண்டு சிரித்திரன் ஆண்டுமலர் கண்ணில் பட்டது அதில் மீசை துடிக்குதடி என்ற பகுதியில் பின்வருமாறு எழுதப் பட்டுள்ளது.

## மீசை துடிக்குதடி

கட்டபொம்மன் மீசை வைத்துக்கொண்டு வெள்ளைக்காரத் துரைக்கு முன் கூனிக் குறுகி நிற்கும் போது

ஸ்டாலினின் மீசை வைத்துக்கொண்டு முதலாளி யின் முன் கையேந்தி நிற்கும் போது.

ஹிட்லர் மீசை வைத்துக் கொண்டு அயல் வீட்டுக் காரனுக்கு அடங்கி நிற்கும் போது பாரதி மீசை வைத்துக் கொண்டு தனிமனிதனுக்குத் துதி பாடும் போது

நன்றி - சிரித்திரன்
டிசம்பர் 1976



''அரசாங்கத்தையே அண்ணாச்சி ஏமாத்தத் தெரிஞ்சவங்க நாங்கள் தான் என்றேன்''

''எபபிடி''

''சோத்துக்கு வழியில்லாமக் குற்றம் செய்திட்டு, அரசாங்கச் சாப்பாட்டையே சாப்பிட்டிருக்கிறம்''

- வடலியூரன் -



யாழ்ப்பாணத்தில், மற்றும் வவுனியாவுக்கு அப்பால் உள்ள சில பகுதிகளிலும் நாங்கள் குண்டு போட்டதாகச் செய்திகள் வந்துள்ளன. அது தவறு. 'சுப்பர் சோனிக்' விமானங்களே குண்டு போட்டன. இதனை யாவரும் உணர வேண்டும். பொது மக்களின் மரணங்களுக்கு அரசாங்கம் பொறுப்பு அல்ல! அவர்கள் போன பாதையில் பலமான பதுங்கு குழிகள் இல்லாமையால் அவர்கள் உயிர் இழந்தார்கள். 'சுப்பர் சோனிக்' விமானங்கள் குண்டு போடும் என்று சொன்னோம். பதுங்கு குழிகள் அமைத்துத் தரும் என்று சொல்லவில்லை ! ! கடந்த எமது கட்சியின் பிரதான கூட்டத்திலும் இதனைக் கூறினோம்......

யாழ்ப்பாணத்தில் 130 வருடப் பழமை யான தேவாலயத்தில் குண்டு விழுந்தது உண்மைதான் ! இது குறிதவறி விழுந்த குண்டுதான் ! அவ்வாறு குறி தவறி வேறிடத் தில் விழுமாறு எல்லாம் வல்ல இறைவன் செய் திருக்க வேண்டும். அந்நேரத்தில் பெரும் காற்று ஒன்றை இறைவன் ஏற்படுத்தி இருந்தால் குண்டு கடலில் விழுந்திருக்கும். ஆகையால் கடவுள் கூட இந்த மக்களின் மரணத்தை விரும்பி உள்ளார்.

நாம் குண்டுகளை மாத்திரம் அனுப்ப வில்லை. மா, சீனி உலர் உணவுப் பொருட் களைக் கப்பல் மூலமாக அனுப்புகின்றோம் குண்டுகளைச் 'சுப்பர் சோனிக்' விமானத்தில் அனுப்புகின்றோம். இலங்கை ஒருநாடு என் பதை நிரூபிக்க எமக்கு இருக்கும் ஒரே வழி குண்டுகளை அனுப்புவதுதான். இதனைப் பெரும்பாலான மக்கள் ஏற்றுக் கொண்டால் ஒற்றையாட்சிக்கு ஆபத்தில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராளுமன்றச் சிரிப்பு

1958ம் ஆண்டில் பொத்துவில் எம். பி. யாக இருந்தவர் ஜனாப் எம். எம். முஸ்தபா அவருக்கும் வவுனியா எம். பியாக இருந்த திரு. செ. சுந்தரலிங்கம் அவர்சட்கும் இடையே பாராளுமன்றத்தில் காரசாரமான விவாதம் நடந்தது. முஸ்தபா அவர்கள் சிங்களமொழியில் புலமை பெற்றவர் என்றும், அவர் எவ்வாறு தமிழ்பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தலாம் என்றும் திரு. செ. சுந்தரலிங்கம் கேட்டார்.

இதற்குப் பதில் அளித்த ஜனாப் முஸ்தபா ஒரு மொழியைப் படிப்பதில் என்ன தவறு எனக் கேட்டார். சுந்தரலிங்கம் கூறினார்; ''வணக்கத்திற்குரிய எனது நண்பன் லூசியன் ஜான்ஸ் என்பவருக்கு 1 டசின் மொழிகள் தெரிந்திருந்தது; ஆனால் தாய் மொழி தெரியாது'' சபையில் சிரிப்பொலி கேட்டது.

## வன்னியசிங்கத்தாரின் சிரிப்பு......!

கோப்பாய் எம்• பி யாக இருந்தவர் திரு வன்னியசிங்கம் அவர்கள். இவர் கோப்பாய்க் கோமான் என்றும் அழைக்கப்பட்டார். தமிழ்மொழியின் நிலை பற்றி நகைச்சுவையாகவும் அவர் பேசியுள்ளார். பாராளுமன்ற அலவன்சைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதற்கான பற்றுச் சீட்டினை விகிதர் சனப் பிரதிநிதிகள் சபை என விலாசம் இட்டு அனுப்பியதாகவும் அவர் கூறினார்.

அதற்கு என்ன நடந்தது எனப் பிரதிநிதிகள் அங்கலாய்த்தனர். அது Try என மீண்டும் 16 அல்பிரட் ஹவுஸ் காடின், கொழும்பு - 03 என விலாசம் இடப்பட்டுத் திரும்பி வந்ததாகவும் அவர் கூறினார். பிரதிநிதிகள் சோகச் சிரிப்பினை அன்று உதிர்த்தனர்.

ஆதாரம் பாராளுமன்றக் கன்சாட்
வால்யூம் 34,

( இன்று நாட்டில்- தமிழ் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்ட பின்பும் கொழும்பில் தந்தி அடிக்க முடியாத மொழி என்கின்றனர் இதனை வாசித்த ஒருவர் )

சென்றமாதம் மட்டக்களப்பில் உள்ள ஒரு கல்லூரியில் சரஸ்வதி பூசை ஆயுதக்காவலுடன் நடைபெற்றது. கல்விக்குரிய தெய்வமான கலைமகள் விழா கல்லூரியொன்றில் காவலுடன் நடைபெற்றது. இதுவே முதல் தடவை. கல்விக் கடவுளுக்கும் காவலா? என கவலை தெரிவித்தார் கலைமாமணியொருவர்.

ஒருவர்:- நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன் அது என்ன காதல்
மற்றவர்:- ஒருதலைக் காதல்
ஒருவர்:- அப்போ இரண்டு பெண்களைக் காதலித்தால்
மற்றவர்:- இரண்டு தலைகள் உள்ள காதல்
ஒருவர்:- ஆ... ? ... ?

மகேந்த்

●●●●●●●●●●●●●●●●●● ●●●●●●●●●●●●●●●●● ●●●●●●●●●

## மட்டக்களப்பில் இருந்து ஓர் உணர்ச்சிக் குரல்

உலகு உள்ளவரை !
உலகில் ஏகாதிபத்தியச் சுரண்டல் உள்ள வரை...
பட்டினியால் மக்கள் செத்துக் கொண்டிருக்கும் வரை !
சின்னஞ்சிறார்கள் கோவணாண்டிகளாய்த் தெருக்களில் கையேந்தி நிற்கும் வரை
பெண்கள் வீட்டு மாடுகளாய்ச் சாகடிக் கப்பட்டுக் கொண்டிருக்கும் வரை !
எவன் சொன்னான் கம்யூனிஸம் தோற்றது என்று ?
நாய்கள் - குரைக்கின்றன கம்யூனிஸம் தோற்றது என்று அவ்வளவு தான்

நன்றி - வயல் ஜனவரி/மார்ச் 93 கம்யூனிஸம் காலாவதியாகி விட்டதா என்ற கட்டுரையில் இருந்து.

க. கனகசுந்தரம்



ஒரு சிறுவன்:- நான் அந்தப்பண்டிதரைத் தமிழ் இலக்கியத்தில்மயக்கி விட்டேன்!
மற்றச் சிறுவன்:- எப்படி ?
ஒரு சிறுவன்:- பையனுக்கு எதிர்ச்சொல் என்ன என்று கேட்டேன் அவர் பையி... பையி என்று சொல்லி விட்டுச் சிரித்தார் .

- கில்லாடி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொழும்பு டயறி

1. அல்சேஷன்:- பணக்காரர்களின் ஆதிசேஷன்

2. தமிழ்:- கொழும்பில் தந்தி அடிக்க முடியாத மொழி.

3. தமிழ் மக்கள்:- அதிக வாடகை தருவார்கள் என்பதற்காகச் சிங்கள மக்களால் குடியேற்றப்படுவோர்.

4. அடையாள அட்டை:- வடக்கா, கிழக்கா என அறிவதற்குப் பயன்படும் மஞ்சள் அட்டை

5. கொழும்பு:- காசிருந்தால் கொழும்பு; இன்றேல் எழும்பு.

6. நகை:- காவல் நிலையம் அருகிலும் களவாடப்படலாம்

7. **தேநீர்க்கடை:-**

பழைய தின்பண்டங்கள் இங்கு சூடு காட்டப்படும்

8. **தினப்பத்திரிகை:-**

வாடகை வீட்டின் அதிகாலை வழிகாட்டி

9. **தாலி:-**

கணவன் பணபலம் உள்ளவனா எனக் காட்டும் உலோகம்

10. **யாழ்தேவி:-**

மயக்க மருந்து கொண்டு செல்வோரின் வாகனம். சுடுதண்ணீர்ப் போத்தலிலும் எடுத்துச் செல்லப்படும்.

11. **மகன்:-**

வெளிநாட்டில் இருப்பின் கௌரவிக்கப் படும் பிறப்பு.

12. **உறவினர்:-**

மரண வீட்டில் ஒன்று கூடும் நல்லவர்கள்.

13. **ரியூசன் மாஸ்ரர்:-**

நவீன நாடோடி

14. **ஒட்டோ !**

மூவரை ஏற்றும் மூன்று சில்லுவாகனம்

15. **வீடியோ:-**

பேயர் பெட்டி

16. **வெள்ளவத்தை:-**

தமிழ் மக்கள் கடற்கரை போனாலும் கைது செய்யப்படும் நகர்

17. ஆதார வைத்தியசாலை:-
ஏழைகளை இனம் காணுமிடம்

18. **தங்கும் விடுதி:-**

அதிக காலம் இருப்பின் காசு தங்காது.

---

## இப்படிச் செய்தால் என்ன ?

ஆஸ்திரேலியாக் கண்டத்தில் உப்புப்புல் என்ற ஒரு வகையான புல் தானாகவே வளர்கின்றது. இது ஆண்டுக்கணக்காக மழை பொழியா விட்டாலும் அழியாமல் வளர்ந்து கொண்டே இருக்கும். அப்புல் மக்களுக்கு உணவுப் பொருளாகப் பயன்படுகின்றது. பஞ்சகாலத்திலும் மக்களை அழியாமல் பாதுகாக்கின்றது.

இப்புல் இலங்கையில் அறிமுகப்படுத்தப் பட்டால் எத்தனையோ மக்கள் பயன் அடைவர் ? யார் தான் நாட்டுவர் இப்புல்லை

- வையக்கோன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டாக்டருடன் சிரியுங்கள்



வீட்டை விட்டுச் சென்ற தனது மகன் வெகு நேரமாகியும் வீடு திரும்பாததை அறிந்து மகனை தேடிச்சென்றான் திருவன். என்ன அதிசயம் அவ்வூர் இராசாவின் பூந்தோட்டத்தில் அத்து மீறிச்சென்று செவ்வரத்தம் பூக்களைப் பறித்த குற்றச்சாட்டின் பேரில் பூந்தோட்ட காவலாளிகள் மகனைக் கைது செய்து இராசாவிடம் அழைத்துச் செல்வதை கண்ணுற்று "புத்தியுள்ள பிள்ளைக்கு செவ்வரத்தம் பூ நஞ்சடா" என்றானாம்.

உடனே திருவனின் மகன் கையிலிருந்த பூக்களை வாயில் போட்டு மென்று விட்டானாம். செய்வதறியாத அரண்மனைக் காவலாளிகள் அவனை எதுவும் செய்ய முடியாது துரத்திவிட்டனர்.

★

முதலாவது நபர்:- ஆறுமுக நாவலர் காலத்திலும், விபுலானந்த அடிகளார் காலத்திலும் தமிழ் பெண் மணிகள் (வயதுவந்தவர்களும்) சட்டை அணிந்து வெளிக்கிடுவதில்லையாம். என்று எங்கள் பாட்டி கூறுகிறார் ஏண்டா இப்ப இந்த பெண்கள் போர்த்துக்கீச, ஒல்லாந்த, ஆங்கிலேய பெண்கள் மாதிரி சட்டை அணிவது.

இரண்டாவது நபர்:- டேய் இதுவுமா உனக்கு தெரியாது. அந்தக் காலத்தில் கணிசமான தூரத்துக்கு காரில் செல்வதானாலும் அவ்வளவு செலவுஏற்படாது. இப்போ அண்மையில் உள்ள இடத்துக்கு செல்வதானாலும் செலவு அதிகம். ஆதலால் தான் துவிச்சக்கர வண்டியில் செல்ல ஆபத்து நேராமல் இருக்கவே தான் இப்படி அணிகிறார்களோ.?

மூன்றாவது நபர்:- இல்லை, இல்லை முன்னையவர் காலத்தில் சீலை உடுத்துவதாயின் வயிறு தெரியப் படாதாம். இப்போ வயிறு தெரிய உடுக்க விட்டால் "அநாகரீகப் பேர்வழி" என்பார்களாம். வயிறு தெரிய உடுத்துக்கொண்டு செக் பொயின்றுகளில் அவர்கள் வயிற்றைக் காட்டும் போது கூச்சமாக இருப்பதாலும் சட்டையாயின் உள்பக்கமும் பொக்கற் வைத்து பணங்களை பிற்பொக்கற் அடிப்பவர்களிடம் பறி கொடுக்காமல் பத்திரமாக எடுத்துச் செல்லலாமென்ற காரணமாக இருக்குமோடா.

முதலாவது நபர்:- இதையாரிடம்டா கேட்டறிவது?!

★

## சிறைக் கைதியை வென்ற சிறைக் காவலாளி

திருட்டுக் குற்றத்துக்காகவே அடிக்கடி சிறை வாசம் அனுபவித்து வரும் சிறைக்கைதியொருவர் சககைதிகளைப்பார்த்துஇன்றைக்குப்பாருங்கள் சிறைக் காவலாளிகளை என்னபாடு படுத்துகிறேன் என்று கூறிவிட்டு ஐயோ வயிற்றை வலிக்கிறதே வயிற்றுவலி என்று உரத்த குரலில் சத்தமிட்டு அழ ஆரம்பித்தானாம். இவர்களுள் ஒரு கைதி இந்த விடயத்தை அவ்வேளை கடமையிலீடுபட்டிருந்த சிறைக் காவலரிடம் விடயம் இப்படித்தான் எனக் கூறிவிட்டானாம். சிறைக்காவலரும் விடயம் அப்படியா நான் பார்த்துக் கொள்கிறேன்என்றுகூறிச் சிறைச்சாலை மேற்பார்வை அதிகாரியி ம் கூறிவிட்டார்.

பாவம் அந்த வயிற்றுவலி சிறைக்கைதியை பரிசோதித்த டாக்டர் மறு அறிவித்தல்வரை உப்புக் கஞ்சியே சாப்பாடு என எழுதிவிட்டார். தொடர்ந்து உப்புக்கஞ்சியைப் பருகமுடியாத அந்தக் கைதி தான் செய்த தவறை உணர்ந்து டாக்டரிடமும், சிறை அதிகாரிகளிடமும் மன்னிப்புக் கேட்டு தான் இனி இப்படி எவரையும் ஏமாற்ற மாட்டேன் எனவும் கேட்டுக்கொண்டான்.

## இந்தியா மூளை

எமது தரமான தேயிலை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்கிருந்து மீண்டும் ஏற்றுமதியாகின்றது.

தொழிற்துறை அமைச்சர்
திரு. கருணாரத்தின.

சுவைத்திரள் வாசகர்களே......இன்றைய சோகம், நாளைய சிரிப்பு, இன்றைய சிரிப்பு நாளைய சோகம். காலம் மாறிமாறி வரும். உங்களிடம் கிளாலி கொம்படி கடந்த சோகக் கதைகள் உண்டா ?
எமக்கு எழுதுங்கள். நெஞ்சைப் புளியும் கதைகள் சுவைத்திரளில் வெளியாகும் எல்லாக் கதைகட்கும் ரூபா 100/- சன்மானம் உண்டு.

அனுப்பும் விலாசம் 105/1 திருமலைவீதி
மட்டக்களப்பு (ப + ஆ + ர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமயோசிதமாக உண்மையை கண்டறிந்து நீதி வழங்கிய நீதிபதி

சட்டவிரோதமாகக் கள் இறக்கிய சீவல் தொழிலாளர்களை அவரவர் முட்டியுடனும் அதனுள் கள்ளுடனும் கையும்மெய்யுமாக பிடித்துக் கோட்டில் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர் கலால் இலாகா உத்தியோகத்தர்கள்.

வழக்கை விசாரித்த நீதிபதி நீங்கள் குற்றவாளிகளா ? சுற்றவாளிகளா ? இந்த முட்டிகளும், அதனுள் இருக்கும் கள்ளும் யாருக்குச் சொந்தமானவை எனச் சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டார் நீதிபதி

எதிரியாக நிற்பவர்கள் யாபேரும் தாங்கள் சுற்றவாளிகள் எனவும் அம்முட்டிகளும் அதனுள் இருக்கும் கள் தங்கட்குச்சொந்தமானவை அல்ல என நீதிபதியிடம் கூறினர்.

நீதிபதி அவர்களைப் பார்த்து இந்த வழக்கு பின்னர் விசாரிக்கப்படும் எனக் கூறி ஏனைய வழக்குகளை விசாரித்தார்.

சகல வழக்குகளும் முடிவுற்ற நிலையில் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை நீதிபதி அழைத்து உங்கள் மீதுள்ள குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படவில்லை.ஆதலால்உங்கள்முட்டிகளை எடுத்துச் செல்லுமாறு கட்டளை பிறப்பித்தார்.

நீதிபதி கூறியது தான் தாமதம் ஒவ்வொருவராகச் சென்று தங்கள் தங்கள் முட்டிகளைக் கையேந்தினர். இவற்றை அவதானித்துக் கொண்டிருந்த நீதிபதி அவர்களை முட்டிகளுடன் தனக்கு முன்னிலையில் வருமாறு பணித்தார். இப்போது குற்றத்தை ஏற்றுக் கொள்கிறீர்களா எனக் கூறி சட்டவிரோதமாகக் கள் இறக்கியமை, பொய் கூறியமை, ஆகிய குற்றங்கட்காக உங்கட்கு கடும் தண்டம் விதிக்கிறேன். தண்டப்பணத்தை கட்ட முடியாவிடில் மறியல் செல்லவும் எனத் தீர்ப்புக் கூறினார்.

டாக்டர் S. காராளசிங்கம்
(நீதிபதி ஸ்ரீஸ்கந்தா கால வழக்கு நினைவுகள்)

---

**விளங்கினால் சிரியுங்கோ**

★ ஓர் ஆளின் பெயருக்கு முன்னால 'அ' எழுத்துப் போட வேண்டிய காலம் வருது.

★ யாரப்பா அது ?

★ மங்கள முனசிங்கா

- வடலியூரான்

---

## சொற்களும், பயன்களும்

(ஒரு கொலை வழக்கில் ஓர் எதிரிக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. தண்டனையை மாற்றுமாறு எதிரி "பிரிவிக் கவின் சிலுக்கு" அப்பீல் செய்தார். அவனரக் கொல்ல வேண்டாம் என்று பிரிவிக் கவுன்சிலில் இருந்து தந்தி வந்தது. " Leave him, Not kill him " என்பதே அந்த வாசகம் மேலேயுள்ள வசனம் ஒரு 'கொமா' வின் பிழையால் மாறிவந்தது. " Leave him not, kill him " (விட வேண்டாம், சாகச் செய்) இதனால் அந்தக் குற்றவாளிக்கு மரண தண்டனை கிடைத்தது.

(விவேகானந்தரைச் சந்தித்த ஒரு நாத்தீகவாதி கடவுள் எங்கும் இல்லை. என ஆங்கிலத்தில் எழுதிக்காட்டினார். (God is nowhere) இதனை அவதானித்த சுவாமி விவேகானந்தர் " கடவுள் இங்கு உண்டு " என அந்த ஆங்கில வசனத்தைப் பின்வருமாறு மாற்றிக் காட்டினார்.

" God is now / here "

சுவைத்தவர்கள்
கச்சேரி / யோகராஜா

ooooooooooooooooooooooooooooooooooooooo

**வைர வரிகள்**

## 13 வயதினிலே...

13 வயதில் கலைஞரின் எழுத்துக்கள் எனது நெஞ்சைத் துள்ள வைத்துள்ளன. என் நாடி நரம்புகளை வீணையாக்கி வாசித்துள்ளன. அவர் எழுத்துக்களை வாசிக்கும் போதெல்லாம் சின்னச் சின்ன மின்சாரங்கள் என்னைத் தீண்டிவிட்டுப் போவது உண்டு:

- கவிஞர் வைரமுத்து -

தான்தேர்ந்து எடுக்கும் சட்டை அளவு கூட ஓர் இளைஞன் தன் எதிர்காலத்தைப் பற்றிச் சட்டை செய்வது இல்லை. உன் பயணம் எதை நோக்கி, நீ எங்கு சென்று சங்கமிக்கின்ற நதி என்று அவன் சுயவிசாரணை நடாத்திக் கொள்வது இல்லை.

எனவேதான் இங்கு பலருக்கு முகம் வேறாய் முகவரி வேறாய் இருக்கின்றது.

- கவிஞர் வைரமுத்து -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுக்குமொழி அண்ணாச்சாமி



கம் இன் தோழர்களே... கம் இன்... நாட்டுக்கு நாடு றோட்டுக்கு றோட்டு, சாலைக்குச் சாலை, வேளைக்கு வேளை, ஆளுக்கு ஆளு, இதுதான் பேச்சு; இது இல்லாவிட்டால் பேச்சுககுப் போச்சுது மூச்சு. இனக்கலவரம் வந்தால் என்ன செய்வது... அதுவே இப்போது மனக்கலவரம்.

போனது எண்பத்து மூன்று. வந்தது தொண்ணூற்று மூன்று. அன்று செத்த ராணுவவீரர் 13, இப்போது இறந்தது பல பதின்மூன்று. ஓடிச் சென்றார் கொழும்பை விட்டுத் தமிழர் அன்று! ஓடியவர்கள் தேடிச் சென்று, வாழுகின்றார் கொழும்பில் இன்று! அன்று இருந்தது ஆயிரக்கணக்கான தமிழர். இன்று வாழ்வது சில லட்சம் தமிழர். அன்று ''go'' எனச் சொல்லாமல் ஓடினர். இன்று ''போ'' எனச் சொன்னாலும் போக்கிடம் இல்லை!

அழிவின் விளிம்பிலே, கொழும்பிலே, தமிழர் வாழ்வதாக அழுகின்றனர். அழுது, அழுது, பொழுதைக் கழிக்கும் தமிழர் அழிந்தும், விழுந்தும், காலம் கழிந்தும், கொழும்பில் வாழ நினைப்பதேன்? அறைக்கு 5000 வாடகை, அட்வான்ஸ் 50,000 ஆளுக்கு மூறையே கட்டி, குப்பம் எல்லாம் கப்பம் கட்டி, கண்டதைத் தின்று ஏப்பம் விட்டு, வாழும் வெளிநாட்டுக்காசில் கிளித் தட்டுப் பாய்ந்து வாழ்க்கை வாழ்க்கையா சீச்சீ .. .. சீழ்க்கை

பொல்லால் அடித்த காசு வெளிநாட்டில் இருந்து வந்தால் சொல்லால் அடித்துக் காசு கேட்கிறாரே... கொழும்பில்! கொழும்பிலே தமிழனுக்கு யார் காவல்? பூனைக்கு எலி காவலா? காவல் என்றால் எல்லை மீறல்; அதனை எடுத்துக்காட்டினால் சொல்லு மீறலாம். இதெல்லாம் சட்டநாறல் என்கின்றேன்.

சட்டத்தை மீற லஞ்சம் வேண்டுமாம்! அப்படியென்றால் அது ஒரு வஞ்சம்!! பணம் இல்லாதவன் யாரிடம் போவான் தஞ்சம். காவற்துறையில் இல்லையா நல்ல நெஞ்சம். அஞ்சாதே நெஞ்சமே வரும் ஒரு நாள் தஞ்சம்.

'மகசீன்' வைத்திருந்தது தவறு தான். ஆனால் மகசீன் வைத்திருந்தமைக்காக நியூ மகசீனில் வருடக்கணக்காக அடைப்பது ஏன்? பொலித்தீன் கடத்தியதற்காக மகசீனில் அடைப்பது சரியா? எங்களுக்குப் உங்களுக்கும் சேர்த்தே கேட்கின்றேன்?

திருவிளையாடல் படத்தில் வசனம் ஒன்று கவனத்தை ஈர்க்குது. சேர்ந்தே இருப்பது வறுமையும், புலமையுமாம். சிவாஜி சொல்கிறார். சபாஷ் என்கின்றேன். இலங்கையிலே சேர்ந்தே இருப்பது வெலிக்கடையும், நியூ மகசீனும்! அறளை பேந்த சனங்களை எல்லாம் பொறளை வெலிக்கடையில் வைச்சிருக்கக் கண்டேன்.

அங்கே நானும் இருந்தேன், தவழ்ந்தேன், அடிவாங்கினேன். சொந்த மண்ணிலே வாங்கினேன் அடி. அதனைச் செய்தது தடி. சிறையில் வந்தது தலையிடி. அதனால் எனது குடும்பத்திற்கு வந்தது மிடி. இதையெல்லாம் யாருக்குச் சொல்லுவேனடி! விருப்பம் என்றால் கேளடி.

வருகுது விரைவில் பொங்கல். ஆனால் விலைவாசியைப் பார்த்தால் வருகுது விக்கல். அதனால் வருகின்ற பொங்கல் ஒரு மங்கல். குட்......டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒரு நாள் எனக்குச் சரியான பணக்கஷ்டம். எனது நண்பன் ஒருவனை நோக்கிப் புறப்பட்டேன். ரூபா 50 கடனாகத் தரும்படி கேட்டேன். அவனோ நகைச்சுவைப் பேர்வழி. நான் கடன் கேட்டபோது அவனிடமும் காசு இருக்கவில்லை. தனது நண்பன் ஒருவனின் ஆறுமாதக் குழந்தையைக் கையில் ஏந்தியபடி வைத்திருந்தான். அப்பிள்ளையின் தகப்பன் கனடாவில் இருக்கிறார். பிள்ளையின் சிரிப்பை ரெலிபோனில் கேட்பது சிரமம் என்றும் டெலிபோனில் அழச்செய்து அந்தக் குரலைத்தான் கேட்கவேண்டும் என்றும் கோரினார். பிள்ளையின் கையில் நுள்ளினான் நண்பன். கனடாக் 'கோலில்' அது பதிவானது. பிள்ளை டெலிபோனில் 3நிமிடம் அழுதது.

பிள்ளை கனடாவிற்காக அழுத ஏஜன்சித் தபால் நிலையத்தை விட்டு வெளியேறினோம். ரூபா 450 செலவானது. ஆட்டோவுக்கு 50 ரூபாக் கொடுத்தான் நண்பன். எனக்கு 50 ரூபாத்தருமாறு நண்பனிடம் கேட்டேன். அவன் சொன்னான் '' குழந்தை 3 நிமிடம் அழுதது. அதனால் குழந்தையின் தாய் தந்த காசு முடிந்துவிட்டது. இவனின் அழுகை உமது அழுகை; புரிந்து கொள் என்றான்.

நான் வாய்விட்டுச் சிரித்தும் விதியை நொந்து அழுததும் அன்றுதான்.

நடந்த இடம்: கொழும்பு (தெற்கு)

## றம்புட்டான் விதி

றம்புட்டான் விதை ஒன்று தொண்டையில் சிக்கியதால் நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் மரணம் அடைந்தான். அவரெக்க வலந்தவெத்த என்ற இடத்தைச் சேர்ந்த பி. இந்திக சதுரங்க என்ற சிறுவனே மரணம் அடைந்த சிறுவனாகும்.

( ஆதாரம் தினகரன் ஆகஸ்ட் 14 - 93)

## பாவம் இந்த வெளவால்கள்

தமிழகத்துக் கோயில்களில் இருக்கும் வெளவால்கள் எல்லாம் பாவச்சுமையைக் கழிக்கும் கோயில் சொத்தைத் திருடிய பாவாத்மாக்கள். இவ்வாறு தமிழக அறநிலையத்துறை அமைச்சர் திரு. பால்ராஜ் கூறியுள்ளார்.

ஆதாரம்:- இந்தியா ருடே

## எதிரிக்கும் வரக்கூடாது

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரர்கள் கிணறு ஒன்றுக்கு இரையான சம்பவம் ஒன்று தங்கொட்டுவ கோனவல என்ற இடத்தில் நடைபெற்று உள்ளது. நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றின் 'சொக்கட்' கிணற்றுக்குள் விழுந்ததால் அதை வெளியே எடுக்க முற்பட்டபோதே ஹெட்டிஆராச்சி லோரன்ஸ் என்பவர் கிணற்றுள் விழுந்துள்ளார்.

அவரை வெளியே கொண்டு வருவதற்காக இரண்டாவது சகோதரர் அன்டனி (34) கயிற்றைப் பிடித்த வண்ணம் கிணற்றுக்குள் இறங்க முற்பட்டபோது அவரும் நழுவி விழுந்துள்ளார் இந்த இருவரையும் மீட்பதற்காக மூத்த சகோதரர் சிறிபால (35) கிணற்றுக்குள் இறங்க முற்பட்டபோது அவரும் தவறி விழுந்துள்ளார். கிணற்றுக்குள் காணப்பட்ட நச்சுவாயுவே இதற்குக் காரணமாம்.

ஆதாரம் / வீரகேசரி
26 - 08 - 93

## 10 ரூபா

தேயிலைத் தோட்டங்களைத் தனியார் பொறுப்பேற்ற பின்பு தொழிலாளர்களின் வருமானம் குறைவடைந்துவிட்டது' மஸ்கெலியாவில் தொழிலாளர் ஒருவரின் மாதச் சம்பளம் சென்ற மாதம் 10 ரூபாவாக இருந்தது. உலகில் எங்குதான் இப்படி ஒரு நிலை உள்ளது?

## ஆறு மணிக்கு முன் ஓடிவிடு

கொழும்பு 3ல் உள்ள ஒரு ஒழுங்கையால் போய்க் கொண்டிருந்தேன். தமிழில் உரையாடிய ஒரு வயதான மூதாட்டி '' நீங்கள் யாழ்ப்பாணத் தமிழரா? அப்படி என்றால் 6 மணிக்கு முன்பே விசயத்தை முடித்து விட்டு வீடு போங்கள். '' இல்லை என்றால் பொலிஸ் பிடிக்கும் '' என்றார். நானும் அவ்வாறே நடந்தேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது சிரிப்பதற்கான இடம் அல்ல
(தொடர்ச்சி)

அடுத்த நாள் விசாரித்துப் பார்த்தேன். அந்த மூதாட்டியின் பிறப்பிடம் யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை. அவவுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். மருமக்கள் இரண்டு பேரும் சிங்களப் பொடியன்கள் நான் தான் அன்னியனாகப் போய்விட்டேன் அதை நினைத்தால் அழுகை வரும்.

---

சிவனொளிபாதமலைக்குச் செல்லும் வழியில் உள்ள மஸ்கெலியாவைச் சேர்ந்த ''மூள்ளுகாமம்'' சந்தியில் அமைந்துள்ள பெயர்ப்பலகை இதுவரை காலமும் மும்மொழிகளிலும் காணப்பட்டது. ஆனால் கடந்த சில மாதங்களாக தனிச் சிங்களத்தில் மாத்திரம் சிவனொளிபாத மலைக்குச் செல்லும் விபரம் இவ்விடத்தில் எழுதப்பட்டுள்ளது. தமிழ் மறைந்த மாயம் என்னவோ?

ஆதாரம் வீரகேசரி 23/09/93

## சங்கிலி அறுத்த நபர் கால்களை இழந்தார்

(காசி நவரத்தினம்)

ரெயிலில் பிரயாணம் செய்த பெண்ணின் சங்கிலியை அறுத்துக் கொண்டு பாய்ந்து ஓடிய திருடன் அதே ரெயிலுக்குள் அகப்பட்டதால் கால்கள் இரண்டும் துண்டிக்கப்பட்ட நிலையில் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளான்.

மொரட்டுவையிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிவந்த ரெயில் கொள்ளுப்பிட்டி ரெயில் நிலையத்தில் தரித்து நின்று விட்டுப் புறப்பட்ட போதே இச்சம்பவம் நடந்துள்ளது.

ரெயில் வண்டிகளில் நீண்ட நாட்களாகத் திருட்டை நடத்திவரும் கோஷ்டியைச் சேர்ந்தவரே இந்நபர் என்று கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவையைச் சேர்ந்த பிரஸ்தாப பெண் பிரயாணி திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக மொரட்டுவை சென்று திரும்பிய போதே இச்சம்பவம் இடம் பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீரகேசரி 28/09/93

மட்டக்களப்பிலே காதல் தற்கொலை நிகழ்வுகள் அதிகரித்துள்ளன. வாகனங்களைப் பொறுப்பின்றிச் செலுத்தியதால் பல மரணங்கள் பதிவாகியுள்ளன. கடல் பலரை விழுங்கியுள்ளது. இதற்கு மேலாக இடிமின்னல் கூட அப்பாவித் தமிழ் மக்களையே பலியாக்கி வருகின்றன. எப்படியோ இயற்கை கூடத் தமிழ் மக்களை ஒவ்வொரு நாளும் பலிவாங்கி வருகின்றது.

---

களுவாஞ்சிக்குடியில் வைத்துக் கடத்தப்பட்ட இரண்டு பெண்கள் ஒரு வாரம் கழித்து கொழும்பிலும் கண்டியிலும் அநாதரவாக விடப்பட்ட நிலையில் களுவாஞ்சிக்குடி வந்து சேர்ந்தனர்.

கொழும்பில் கடந்த மாதம் கைதான 6 தமிழர்களின் நிலைமை என்ன என்று தெரியவில்லை. 80ம் ஆண்டில் தமிழ் மக்கள் என்ன நிலையில் இருந்தார்களோ அந்த நிலையே தொடர்கின்றது. இது தொடர்பாக சர்வதேச மன்னிப்புச் சபையும் கவலை தெரிவித்துள்ளது.

---



மனைவி:- அந்தக் காலத்திலை புலிப்பல்லுக் கொண்டுவந்த வீரன்களுக்குத் தான் பொண்ணு கொடுத்தாங்கள். அந்தப் புலிப் பல்லைத் தாலியிலே கோர்த்துப்பொண்ணுக்குக் கட்டுவாங்களாம். என்ன இளிக்கிறீங்க...... நீங்கள் கொடுத்து வைச்சனீங்க அப்பா தந்த இரண்டு லட்சம் இனாமிலை ஆறு பவுண் தாலி கட்டிட்டு இளிக்கிறீங்களாம் இளிப்பு—

நித்தியவல்லி

---

## வாடகை ஜோக்

ஒருவர்: என்ன முதலாளி அவன் இறந்ததற்காக இவ்வளவு தூரம் அழுகிறீங்க!

மற்றவர்: அவன்..... முதலாம் திகதி வாடகைக் காசு தந்திட்டு இரண்டாம் திகதி கண்ணை மூடியிருக்கலாம். 30ம் திகதியே மாண்டு போனானே? எங்கே இருக்கிறான் கடவுள்.

ஒருவர்: ? ? ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மென் மொழிகள்

1. தன்னைத்தானே தியாகம் செய்து கொள்வதில் ஆணைவிடப் பெண்ணே எந்நாளும் சிறந்தவள். - காந்திஜி

2. ஒரு பெண் தாழ்ந்த குரலில் பேசினால் அடைய விரும்பியதில்லை. இன்னும் அடையவில்லை என்பது பொருள். உரத்த குரலில் பேசினால் அடைந்து விட்டாள் என்பது அர்த்தம்! - பெட்ரோமாத்தியுஸ்

3. ஒரு பெண்ணை மதமாற்றம் செய்தால் ஒரு குடும்பத்தை மதமாற்றம் செய்த மாதிரி. - யாரோ

4. கடன்பட்டுக் கஸ்டப்படுவதை எச்சரிக்கின்றேன்: அக்கடன் இரவு நேரத்தில் உமக்குக் கவலையை உண்டுபண்ணும், பகல் நேரத்தில் உன்னைத் தலை குனியச் செய்யும். - ஹிந்து பைஹகி

5. ஒரே வயதுடைய பெண்ணைக் கல்யாணம் செய்பவன் அபாக்கியசாலி. ஏனெனில் அவளின் விவேகமான நடத்தையினை ஈடுசெய்யும் ஆண்மை மணமகனுக்கு இல்லாது போய்விடுகின்றது. - யாரோ

---



ஒருவர்:- பாராளுமன்ற உறுப்பினரை பா. உ. என்கிறார்கள் நான் ச. ஊ எனத் திருத்தம் செய்கிறேன்.

மற்றவர்:- ஏன் அப்படி?

ஒருவர்:- மக்கள் சிலுவை சுமக்கும் நேரத்தில் அவர்கள் சலுகை ஊர்கிறார்கள்

ஒருவர்:- ? ? ?

வடலியூரன்



## புதுக்கொடி

என்ன கனகண்ணன் வீட்டுப் படலையிலை புதிசாக ஏதோ கொடி போட்டிருக்கிறார்?

அது......புது விதமான கொடி. தன்னிடம் கனடா மாப்பிள்ளை இருக்கிறது என்பதைக் காட்டியுள்ளார்.

- இல்லாடி -

---

## இப்படியும் நடந்தது

எமது ஆசிரியர் மிகவும் கண்டிப்பான பேர்வழி. அவர் எமக்குத் தமிழ் ஆசிரியராக வந்து வாய்த்தார். கவிதை, கட்டுரை எது எழுதினாலும் அதனைச் சிவத்த மையால் திருத்தி இப்படி எழுதலாம், அப்படி எழுதலாம் எனக் கூறுவார்.

ஒரு நாள் மாலைப் பொழுது என்பது பற்றிக்கவிதை எழுதுமாறு ஆசிரியர் பணித்தார். எனக்கு எதுவும் எழுத வரவில்லை. மகாகவி பாரதியார் எழுதிய கவிதை ஒன்றினை எழுதி வைத்தேன்.

நான் எழுதிய கவிதை சிவப்புக் கோடிட்டு இந்த இடங்களில் திருத்தலாம், இன்ன சொற்களில் குறைபாடு உள்ளது என்ற விளக்கங்களுடன் கவிதை திரும்பி வந்தது.

- இல்லாடி -

---

மத்திய கிழக்குப் போகும் பெண்ணே உன் பெயர் என்ன? கண்ணகி

அகதி முகாமில் இருக்கும் தங்கையே உன் பெயர் யாது? மணிமேகலை

விவாகரத்துப் பெற்ற பெண்ணே உன் பெயர் யாது? தமயந்தி

- இல்லாடி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமு மாமாவுக்கு ‘சைட்றூம்’

எமது முதலாவது இதழில் சிரிகதைப் போட்டி ஒன்றை அறிவித்து இருந்தோம். எமக்கு அதிக கதைகள் வந்து சேர்ந்தன. அவற்றில் பரிசைத் தட்டிக் கொண்ட வாசகர் விபரம்:-

த. அன்பரசி
585 3/2, றவுப் பில்டிங் மருதானை றோட்,
மருதானை.

இவரின் கதைத் தலைப்பு ‘ பரமு மாமாவுக்கு சைட்றூம் ’ என்பதாகும். இக்கதையை வாசிக்கும் போது குபீர் சிரிப்பு உண்டாகின்றது. எழுத்தாளர்க்கு எமது வாழ்த்துக்களுடன் பரிசுத் தொகையும் அனுப்பி வைக்கப் படுகின்றது.

(ஆசிரியர்)

சிரிகதை

# பரமு மாமாவுக்கு “சைட் றூம்”!

பரமர் உயர்ந்த தோற்றம் கொண்டவர். வயது ஐம்பத்து எட்டைத் தாண்டிவிட்டாலும் வாலிபநோக்கு அவரை விட்டுப் போகாது. சுமார் 40 ஆண்டுகட்கு முன்பு சிப்பந்தியாக வேலைசெய்த பரமு ஒருநாள் சாப்பாட்டுக்கடை முதலாளியாக உயர்ந்தார். சாப்பாட்டுக்கடையின் நீள, அகல உயரங்களையும், லாபநட்டக் கணக்குகளையும் சிற்றுண்டி வகையிலும், பேருண்டி வகையிலும் உள்ள மிக்சர் விசயங்களையும் இளமையிலேயே உணர்ந்தவர் அவர். வகுப்பு எட்டைத்தான் படித்தாலும் அந்தக் காலத்து இங்கிலீஸ் தெரிந்தவர் அவர். இப்ப எந்தப் பட்டதாரி கடைக்குள் நுழைந்தாலும், அடிப்படை இலக்கணம் தெரியாதவங்கள் இவங்கள் என்று கேலி செய்வார். டெயிலி நியூசைக் கையில் வைத்துக் கொண்டு, வெற்றிலையும் போட்டு ஆட்களை அளவு எடுப்பதிலும் ஊர் பேர், வயது என்ன உத்தியோகம் பார்க்கின்றார். என அறிவதிலும் பரமு சமர்த்தர். அவரின் நகைச் சுவையான கதைகளுக்காக எவரும் ஒட்டுவர். இரண்டு நாள் சாப்பிட்டுவிட்டு மூன்றாம் நாள் கடன் கேட்டாலும் கொடுத்து விடுவார்.

ஆனால் கடன்வாங்கிய பேர்வழி 3நாள் அந்தப் பக்கம் தலைகாட்டவில்லை என்றால் முப்பது பேருக்குச் சொல்லும் பலவீனமும் அவருக்கு இருந்தது. அதனால் அவரை அவிட்டுப் பரமர் எனவும் அழைப்பர். இது அவருக்கு காதில் விழுந்தாலும் கேட்டுக் கொள்ளாதது போல் நடந்து கொள்வார். முதலாளியாக மாறிய பரமர் பல சோற்றுக் கடைகளைத் திறக்கலானார். அதன் மூலம் அவருக்கு இரண்டு சொந்த வீடுகள், கார், வங்கிக் கணக்குகள் எனப் பணம் புரண்டதில் ஆச்சரியம் இல்லை. அவரிற்குச் சோறுபோட்ட புண்ணியத்தால் 3 ஆண் பிள்ளைகள். ஆசைக்கு ஒரு பெண்பிள்ளை. பிள்ளைகள் கடைக்கு வந்தாலும் கொஞ்ச நேரத்தில் கொடுப்பதைக் கொடுத்துக் கலைத்து விடுவார். அவரைப் பொறுத்தமட்டில் கடை நடாத்துவது அவருக்குப் பிடித்த வேலையாயினும் பிள்ளைகள் கடையில் நிற்பது அவருக்கு விருப்பம் இல்லை. பிள்ளைகள் அதிகாரி “ லெவலில் ” வாழ வேண்டும் என்பது அவரின் வேணவா!



### பாடும் காதலர்

காதலன்: அன்னமே ! அமுதக்கிண்ணமே !
ஆண்டுகள் ஆறு கடந்ததே !
ஏனோ இன்னும் தயக்கம்
என் கரம் பற்றிட ?

காதலி; என் எண்ணமே ! என் உயிரே !
உன் கரம் பிடித்திட
உருப்படியாய் சமைத்திட கற்று வா ?

காதலன்: ...... ! ! ?

கோட்டைமுனை - அமிர்ஸ்ரீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2




“ றூம் ” வாடகைக்குக் கொடுக்கும் போது இவர் மருமகனாக வருவானா என்று ஒரு போதும் பரமர் கனவு காணவில்லை.

வீட்டின் முன் அறை ஒன்று காலியான நிலையில் இருப்பது பரமுவுக்குப் பிடிக்கவில்லை. அது “ அற்றாச் பாத் றூமில் ” அமைந்தது. வீரகேசரி, தினகரன் பத்திரிகைகளில் தான் முதலில் விளம்பரம் கொடுக்கலாம் என்றுதான் பரமர் முதலில் விரும்பினார். ஆனால் அப்படிச் செய்தால் வெறும் தமிழ் தெரிஞ்சவன் தான் வருவான் என அவர் நம்பினார். அவரின் பார்வையில் “ டெயிலி நியூஸ்” ஸ்ராண்டட்டுக்கு யாராவது வரவேண்டும்! எனவே டெயிலி நியூசுக்கு விளம்பரம் கொடுத்து அனுப்பினார்.

உயர்ந்த அரச சேவையில் இருக்கும் அரச ஊழியர் ஒருவருக்கு இணைந்த குளியல் அறையுடன் “ றூம் ” ஒன்று சகல வசதிகளுடனும் கிடைக்கும் என்றே அந்த அறிவிப்புக் கூறியது. தொடர்புகள்: சி. பரமு கெந்துராத்து வீதி, கொழும்பு - 03 எனவும் டெலிபோன் இலக்கத்துடன் கொடுக்கப்பட்டிருந்தது.

ரூபா. 25000/- அட்வான்ஸ் என்றும் மாத வாடகை ரூபா 3000/- என்றும் அந்த விளம்பரம் கூறியது.

# 3

முரளி யாழ்ப்பாணத்துப் பையன். அவன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் என்ஜினியர் பட்டதாரி. வசதியான குடும்பத்தைச் சேர்ந்த பையன். வடமராட்சி அவனின் சொந்த மண். அவனைக் கூப்பிடுகையில் “ நோத் கொரியன் ” என நண்பர்கள் அழைப்பர். வடமராட்சிக்கு அவர்கள் கொடுத்த பெயர் அது. முரளி கந்தோருக்குப் போவதற்கு முன்பு “ டெயிலி நியூஸ் ” பத்திரிகையைத் தட்டிப் பார்த்தான். அதில் கொடுக்கப்பட இருக்கும் றூமின் விபரங்கள் இருந்தன.

முரளி விளம்பரத்தில் கொடுக்கப்பட்ட ரெலிபோன் இலக்கத்தை டயல் பண்ணவும் எதிரே பரமர் “ ஹலோ ” எனவும் சரியாக இருந்தது. முரளி தனது பெயரை ஆங்கிலத்தில் கூறி இன்று டெயிலி நியூசில் கண்ட விளம்பரத்தையும் கூறினான். பரமர் டெலிபோனில் முரளியின் தொழில் வயது அந்தஸ்து எல்லாவற்றையும் அறிந்து கொண்டார். அத்துடன் பிற்பகல் 5-30 மணிக்கு வீட்டுக்குத் திரும்பி வருமாறும் இது சம்பந்தமாகக் கதைக்க வேண்டி இருப்பதாகவும் பரமு கூறினார்.

# 4

பிற்பகல் மணி 4-30 பரமர் தனது வீட்டின் உட்புறத்தில் மனைவியுடனும் பிள்ளைகளுடனும் கதைத்துக் கொண்டு இருந்தார். அப்போது அவரின் வீட்டு வாசலில் காரில் வந்திறங்கினான் முரளி. அவனை இறக்கிவிட்ட கார் அவனுக்காக காத்து நிற்கவில்லை. சற்றுத் தயங்குவது போலக் காணப்பட்ட முரளி “ கோலிங் பெல்லை ” அழுத்திப் பரமரைப் பரமசாதுபோலவிசாரித்தான். அவன் தமிழில் கதைக்கவில்லை. சரளமான ஆங்கிலமே அவனின் வாயில் இருந்து வந்தது. பரமு முரளியை உள்ளே வருமாறு கூறினான்: ஆனால் முரளியோ உள்ளுக்குப் போவதற்கு மிகவும் வெட்கப்பட்டு நின்றான். “ கம் மான் இன்சைட் ” என்றார் பரமு. ஒரு புன்முறுவலை வரவழைத்துக் கொண்டே முரளியும் சோபாவில் அமர்ந்தான். முரளியின் தோற்றத்தைப் பரமரின் மகள் அடுத்த “ றூமில் ” இருந்து அளவெடுத்துக் கொண்டிருந்தாள். பாவம் இந்தாளுக்குச் “ சைட் றூம் ” கிடைக்க வேண்டும் என அவளின் நெஞ்சு அடித்துக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"'றூமைப்' பாரும்...... நல்லாப் பாரும். என்ன வசதி இல்லை! வாடகைக் கறாக்டாக 3000/- வேண்டும் என்றார். பரமு.

றூமைப் பார்க்கலாமா எனத் தொடங்கினான் முரளி. பரமர் றூமைக் காட்டி அதில் உள்ள வசதிகளை விளக்கி அங்கு போடப்பட்டிருந்த தளபாடங்களையும் போகும் வரை உபயோகிக்கலாம் எனக் கூறினார். அந்த 'அக்கிறிமென்ட்' சரியென்றால் ரூபா 20,000 தருமாறு பரமு வற்புறுத்தினார். அந்த நிமிடமே முரளி தனது நம்பர் சூட்கேசைத் திறந்து ரூபா 20,000 எண்ணி வைத்தான். அவன் கொடுத்த காசுக்கு 'றிசீற்' கேட்பான். எனப் பரமு எதிர்பார்த்தார். ஆனால் முரளியோ எதுவும் கேட்காமல் இரண்டு நாள் பொறுத்து, "றூமில்" குடியேறப் போவதாகவும் வரும்போது திறப்பைத் தருமாறும் கூறினான். எடுத்தது எல்லாவற்றுக்கும் பேரம் பேசும் பரமர், முரளி கொடுத்த ரூபா இருபதாயிரத்தை எண்ணிப் பார்த்தார். சே......நான் ஏமாந்து விட்டேன். இவன் பணக்கார வீட்டுப் பையன் நான் 25.000 ரூபா கேட்டிருக்கலாம் என மனம் அலுத்துக் கொண்டது. நான் கேட்டபோது பேரம் பேசாமல் காசு தந்த முரளியினை நினைத்தால் பரமரின் மனோநிலை சற்று ஆட்டம் கண்டது சே......என்னுடைய பிள்ளைகளும் இப்படித்தான் .. அனாதையாக எங்காவது 'றூம்' கேட்டால் தன்னைப் போல் தான் யாரும் ஏமாற்று வாங்கள் எனவும் அவர் எண்ணினார். இரண்டு நாட்கள் ஓடிப்போனது. முரளியும் புதுவீட்டில் குடி புகுந்து ஒரு வருடமாகி விட்டது. பரமருக்கு முரளியின் மூலம் வாடைக்காசு வருடம் 36.000 புரண்டது

## 5

வீட்டில் தனது குடும்பத்தினர் முரளியுடன் முரண்படாது பழகுவதையும், அவனுக்கு 'ரீ' அது இது எனக் கொடுக்கப்படுவதையும் குடும்பத்தில் அவனும் ஒரு அங்கம் ஆகிவிட்ட விசயம் பரமருக்குச் சாடைமாடையாகத் தெரிந்தது. அவனை எந்த விதத்திலாவது வீட்டைவிட்டு வெளியேற்றி விட வேண்டும் எனப் பரமர் துடித்தார். ஆனால் அவனை வெளியேற்றுவது என்ற கதையைக் கேட்ட மாத்திரத்தில் எல்லோரும் இடியேறு கேட்ட நாகம் போல் நின்றனர். எவருமே ஒத்துழைப்பதாகத் தெரியவில்லை. கடைக்குச்சென்ற பரமருக்கு கடைக்கு வரும் அரச ஊழியர் ஒருவர் உங்களுடன் தனிப்பட்ட முறையில் ஒரு கதை இருப்பதாகக் கூறிச் சென்றான். அவன் இரவு சாப்பிட வரும்வரை பரமு முதலாளி பார்த்திருந்தார். அந்த ரகசியத்தில் தனது அலுவலகத்தில் வேலை செய்யும் இன்ஜினியர் முரளிக்கும், பரமுவின் மகளுக்கும் இடையே ஆறு மாத காலத்துக்கு மேல் காதல் இருப்பதாகவும், பரமரின் மகள் இப்போது 2 மாதக் கர்ப்பிணியாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. பரமுவின் தலையிலே சிவனொளிபாத மலையிலே இருந்த கல் ஒன்று தடக்கித் தலையில் விழுந்தது. தனது மானம், மரியாதை சகலதும் இழந்து கட்டி வளர்த்த ஹோட்டல் மின்னலால் தாக்குண்டு விழுந்தது போன்றும் பரமு பதறினார்.

அவர் ஆட்டோவில் சென்று வீட்டில் இறங்கவும் அவரின் ஆட்டோவை உரசிக் கொண்டு முரளியின் கார் போய்க் கொண்டிருந்தது.



அம்மாவும், அப்பாவும் அன்பாக இருப்பதால் என்னைப் பாடசாலை விடுதியில் சேர்த்தார்கள்

அப்படியென்றால் ஏன் வீடு செல்ல விரும்புகின்றாய் ?

அம்மாவிலும் அப்பாவிலும் தான் விருப்பமாக உள்ளதால் வீடுசெல்ல விரும்புகின்றேன்

- கில்லாடி-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6

வீட்டிற்குள் நுழைந்த பரமு மனைவியின் மேல் பேயாகப் பாய்ந்தார். ஹோட்டலுக்கு வந்தவன் தனது குடும்ப விவகாரத்தைத் தனக்குச் சொன்ன பரிதாப நிலையை எண்ணித் தலையில் அடித்தார். கடைசியாக மனைவியிடம் இருந்து எடுத்த தகவல்கள் பின்வருமாறு அமைந்திருந்தது.

1) மகள் 2 மாதக் கர்ப்பிணி.

2) முரளி கல்யாணம் செய்வதற்கு முன்வந்திருக்கிறார்; பின்வரும் நிபந்தனைகள் எதிர்கால மாமா பரமருக்கு விதிக்கப்படும்.

A) கல்யாணம் ஒழுங்காக நடைபெற வேண்டுமானால் முழுவீடும் முரளியின் பெயருக்கு மாற்றப்பட வேண்டும்.

B) ரூபா 50 ஆயிரம் பெறுமதி மிக்க, 22 கரட் தங்க நகைகள் மணப்பெண்ணுக்குக் கொடுக்கப்படவேண்டும்.

C) இனாம் 5 லட்சம்

D) மிகுதியாக உள்ளவைகள் சீவிய உரித்தாக்கல்.

காலம் இப்போது கடந்துவிட்டது. முரளி இப்போது வீட்டுச் சொந்தக்காரனாகி விட்டான். உள் வீட்டில் குழந்தையின் அழுகுரல் கேட்டது. சைட்றூமில் பரமர் இருமிக் கொண்டிருந்தார். அவரின் கையில் சிகரட் ஒன்று புதிதாக.

( யாவும் கற்பனை )



இந்த அரசாங்கம் எமக்குப் பெரிய பிழையொண்டு செய்யுது ?

என்ன பிழை?

நாங்க வேலையில்லாமல் இருந்த நேரம் வேலை தரயில்லை, அப்புறம் கஷ்டப்பட்டு கடைபோட்டாப் பிறகு பி. ரி. ரி எண்டு யாரையோ அனுப்புகிறாங்கள். கடைகட்டித் தந்தானா? சாமான் போட்டானா ? விற்பனைக்கு ஆள் வைத்தானா? யாரைக் கேட்கிறான் பி-ரி ரி ?

- வடலியூரன் -

## குறை கூறிக் குசேலர்



உலகத்திலை ஜப்பான் நாடுதான் பெரிய தொழில் வளம் உள்ள நாடாம்! மனித உள்ளம் அவர்கட்கு நல்லா இருக்காம்! பௌத்த நெறி முறைக்கு மேளம் கொட்டுறாங்களாம்! இரண்டாம உலகப் போரிலை கொரியாப் பெண்களை பாலியல் அடிமையாய் வைச்சிருந்ததுக்கு அரை நூற்றாண்டுக்குப் பிறகு வருத்தம் தெரிவிச்சு அறிக்கை விட்டிருக்காங்கள் .........

அட ஒங்கொப்புராணை சொஞ்ச வருசத்துக்கு முன்னை இந்த அறிக்கையை விட்டிருந்தால் ஜே- ஆர் . சான்பிரான்சிஸ்கோ மகாநாட்டிலை இதை வைச்சு வெட்டு வெட்டெண்டு வெட்டிக் கிழித்திருக்கலாம்..... ரூ ...லேட் ...



என்ன அந்த வீட்டிலை பரதநாட்டியச் சத்தம் கேட்குது!

ஓ...... அதுவா......தனக்கு முன்னாலே பரத நாட்டியம் ஆடினால் தான் எடுத்த சம்பளத்தைத் தர முடியும் என்று மாப்பிள்ளை அடம் பிடிக்கிறாராம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொறாமை, அறியாமை, தீண்டாமை இம்மூன்றுக்கும் எதிராகக் குரல் கொடுத்த இலக்கிய சக்தி சவாரித்தம்பர்**



# சவாரித்தம்பர் ஒரு விமர்சனக் கண்ணோட்டம்

திக்கவயல்

பெண்ணினத்தைப் பெருமைப் படுத்தியதில் தமிழர்கட்குப் பெரும் பங்கு இருக்கின்றதா என்பது ஆய்வுக்கு உரியதாயினும், பெண்களுக்குச் சம அந்தஸ்து கொடுப்பதில் தமிழ்ச் சமுதாயம் தவறிவிட்டது.

இலக்கியத்திலும் சரி நடைமுறை வாழ்க்கையிலும் சரி பெண் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டதால் இலக்கியத்தில் அவளை நிராகரிக்க முடியாது போனது. காரைக்காலம்மையார், கண்ணகி, மாதவி, வாசுவதத்தை, மணிமேகலை, திலகவதியார் என இந்தப் பட்டியல் நீண்டு செல்லும். இவர்கள் தமது செயல்களால் இலக்கியத்தில் இடம்பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

வடமொழியிலிருந்து இராமாயணத்தைக் கம்பர் தமிழில் பாடினார். சீதையைத் தமிழ் உருவப்படுத்தினார். அதனால் சீதை இராமனைக் காதலித்த குற்றத்திற்காகத் தனது இறுதி அத்தியாயத்தைத் தீக்குளிப்பில் முடிக்க வேண்டியிருந்தது. பெண்களை ஆண்கள் சந்தேகிப்பதால் அவர்கட்கு இலக்கியத்திலும் சமசந்தர்ப்பம் இல்லை.

வள்ளுவன் தனது மனைவி வாசுகியைப் பற்றி என்ன கருத்துக் கொண்டிருந்தார்! அந்த விசயமே ஒரு சுவாரஷ்யமான ஒன்று தான். வள்ளுவர் சாப்பிட்டு முடிந்ததும் அவரின் மனைவி ஓர் ஊசியைக் கொண்டு வருவாளாம்! ஆனால் ஏன் என்று கேட்பதில்லை அதிக காலம் சென்றுதான் ஒருநாள் கேட்டாள். உங்களுக்கு இவ்வளவு காலமும் சாப்பாட்டிற்குப் பின்பு ஏன் ஊசி தேவைப்பட்டது என்று!

வள்ளுவர் சொல்கின்றார். இவ்வளவு காலமும் இதனைக் கேளாத என் தர்மபத்தினியே; நான் சொல்வதைக் கேட்பாயாக, ''நான் சாப்பிடும் சோற்றில் கீழே விழுந்தவற்றைக் குத்தி எடுப் தற்காகத்தான் அதனை வருவித்தேன் என்றாராம்!

இக்கதை வாய்மொழியாக வழங்கி வந்தாலும் கூட பெண் அடிமைத்தனத்தை இந்தக் கதை நன்கு வெளிக்கொணர்கின்றது. வள்ளுவர் சாப்பிடும் போது மனைவி வாசுகி அங்கு நிற்பது இல்லையா? ஊசியால் வள்ளுவர் என்ன செய்கிறார் என்பதை அவதானிக்கவில்லையா ? சொல்வதைச் செய்வது தான் பெண்ணின் வேலையா? அவளுக்கென ஆத்மா ஒன்று இல்லையா?

பெண்: ஹோட்டல் முதலாளியை கல்யாணம் பண்ணியது தப்பாப்போச்சு

மற்றப் பெண்; ஏண்டி என்ன பண்ணுறாரு

பெண்: ஒவ்வொரு நாளும் மிஞ்சும் பழைய கறிகள் எல்லாம் சாம்பார் வைக்கச் சொல்லுறாரு.

- நவம் -

( 1ம் பக்கத் தொடர்ச்சி )

எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் சலுகை ஊர்கின்றார்கள் என்ற சந்தேகமே வளர ஆரம்பித்து விட்டது.

போராடத்தான் தெரியவில்லை என்றால் பேசவாவது தெரிய வேண்டாமா? மிஞ்சிக்கிடக்கும் கேள்வி நேரங்களில் கேள்விக் கணையாவது தொடுக்கக்கூடாதா?

பாராளுமன்றத்தில் சிறந்த பேச்சாற்றலைக் கொண்டால் மாத்திரம் இவர்களைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் என அழைக்கலாம். இவர்கள் சலுகை ஊர்வதை மாத்திரம் நினைப்பார்களாயின் ச. ஊ என அழைப்பதே பொருத்தமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி வாசுகி இறந்த போது வள்ளுவர் என்ன சொல்லிப் புலம்புகின்றார்? வாசுகி என் பிராண நாயகியே "பின் தூங்கி முன் எழுந்த பேதையே போறீரோ" இங்கே வள்ளுவர் சொல்லும் பின் தூங்கி முன் எழுவது பெண்ணிற்கு வள்ளுவர் கூறும் ஆப்புச் சட்டமா? வள்ளுவர் போன்ற அறிவாளிகள் இந்நிலையைப் பெண்ணிற்கு அளித்தனர் என்றால் சமுதாயம் எப்படி அவர்கட்குக் கௌரவம் கொடுத்திருக்கும் ஒப்பாரியில் பேதையே என மனைவியை வள்ளுவர் அழைப்பது பகுத்தறிவு இல்லாதவள் என்ற கருத்தையும் அறிவிக்கின்றது.

இவ்வாறு பெண்ணிற்கு வீட்டில் உரிமை கொடுக்காத வள்ளுவன் "பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும் திண்மை உண்டாகப் பெறின்"

என்கின்றார் ஆகப் பெண்ணிற்கு அணிகலன் கற்பு என்பது பற்றி எமது இலக்கியங்கள் எடுத்துச் சொல்லி அவர்களின் மற்றைய சம உரிமையைத் தட்டிப் பறித்தன.

தமிழ் பக்திக்குரிய மொழி. அம்மொழியில் தோன்றிய திலகவதியார், காரைக்காலம்மையார் எம் மதத்துக்குப் பெரும் சேவை செய்துள்ளனர். கல்வி, செல்வம், வீரம் என்ற மூன்றுக்கும் மூன்று தெய்வங்களை உருவகப்படுத்திய பண்பு தமிழர்கட்கு இருந்தது. இவ்வாறு பெருமைப்படுத்திய பின்பு கல்வி, செல்வம், வீரம் மூன்றிலும் பெண்களைப் பின்னுக்குத் தள்ளிப் பெண்புத்தி பின்புத்தி என ஒதுக்கியவர்களும் எம்மவர்களே! பட்டினத்தார் பாடல்கள் பக்திச்சுவை நிரம்பிய பூங்கா எனினும் பெண்களைப் பற்றி அவர் சொல்லும் கருத்துக்கள் பெண்ணினத்தைத் தாழ்த்திவிட்டன.

பெண்பாற் புலவர்களை, ஆண்பாற் புலவர்களை ஆதரித்தது போன்று அரசர்கள் ஆதரிக்கவில்லை. ஒட்டக்கூத்தன், புகழேந்தி, கம்பன் போன்ற இவர்கள் காலத்துக்குக் காலம் மன்னர்களால் ஆதரிக்கப்பட்டார்கள் ஆனால் பெண்பாற் புலவர்கட்கு அத்தகைய முக்கியம் கிடைக்கவில்லை காக்கைபாடினியார் வான்கோழியார், ஒளவையார் போன்ற பெண்பாற் புலவர்கட்கு பெரும் அரச ஆதரவு இருந்தது என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. அதிகமான நீடூழி வாழ ஒளவையார் நெல்லிக்கனி கொடுத்தார். இது இலக்கிய வரலாறு. என்னை ஆதரிக்க இவன் ஒருவன் தான் இருக்கின்றான் என ஒளவை கருதி அவன் 100 ஆண்டுகள் வாழ விரும்பியிருக்கலாம்.

இது இவ்விதமிருக்க, பெண்பாற் புலவராக இருந்த ஒளவையே பெண்களை இழிவாகப் பல சந்தர்ப்பங்களில் பாடியுள்ளார். விருந்து பரிமாறாத பெண்ணினை எட்டேகால் லட்சணமே என்கின்றார். இன்னொரு சந்தர்ப்பத்தில் பெண்ணே உன்னைப் படைத்த பிரமனைக் கண்டால் பற்றிப் பிடித்துக் கிளியேனோ என்கின்றார். அப்படியாயின் இலக்கியத்தின் முன்னோடிகள் பெண்ணின் உரிமையை நிலை நாட்டத் தவறிவிட்டனர்,

கண்ணகியால் சிலப்பதிகாரம் பெருமைப்படுகின்றது. கண்ணகி தன் செயலால் தன்னைப் பெருமைப்படுத்திக் கொண்டாள், ஆனால் சிலப்பதிகாரத்துக்குக் கதாநாயகன் தான் உயிரூட்டுவதாகச் சில விமர்சகர்கள் கருதுகின்றார்கள். பெருங்குடி வாணிபன் பெருமகள் கண்ணகி. அவளின் காற்சிலம்பே அதிக பெறுமதி கொண்டது. அது அவளின் சீதனமே எல்லாம் தோற்றுவிட்ட கோவலன் கண்ணகியிடம் திரும்பி வருவது கூட அவளின் சீதனத்தை நம்பி என்று கூடச் சொல்லலாம், அவளிடம் எதுவும் இல்லையென்றால் கோவலன் வேறிடம் கூடச் சென்று இருக்கலாம். நான் இங்கே வலியுறுத்திச் சொல்வது என்ன என்றால் சீதனத்திற்கு வளர்க்கப்பட்ட ஒரு ஜீவனாக, தமிழ்ச் சமுதாயம் அவளைக் கருதியது. அவளை இலக்கியம் பெருமைப்படுத்தியது. சந்தர்ப்ப வசத்தால் தான் என்பது எமது துணிவு.


இப்போது வெளிவருகிறது.

மட்டக்களப்பில் புதிய ஒரு இலக்கிய ஏடு.

"கலையுள்ளம்"

தொடர்புகள் :

ஆசிரியர் "கலையுள்ளம்"
90, மத்திய வீதி,
காத்தான்குடி- 03.


ஆபிசர்- சீ......என்னடா இது ஒரே புகைமயமாக இருக்குது? சீ......சீ......

பியோன்- ஐயா! இது பிரிஸ்டல் புகை எப்படித் தான் நீங்க குசினிப் புகையை சமாளிக்கிறீங்களோ? !

ஆபிசர்- ...ஆ...?...?...

- மஹிந்தாஸ் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணடிமைத்தனம் இந்தியாவில் பிறந்து தமிழ் உலகத்தில் சங்கமித்து உள்ளது. வள்ளுவன் தொடங்கிக் காந்தியார் வரை பெண்மையைப் பெருமைப் படுத்தவில்லை. வள்ளுவர் வாசுகியை எவ்வாறு நடாத்தினாரோ அவ்வாறு கஸ்தூரிபாயைக் காந்தியார் ஆடாப் போட வைத்திருக்கிறார் அதற்காக அழுதும் உள்ளார். இந்தச் சந்தர்ப்பங்களைக் காந்தியார் சத்தியசோதனையில் சுட்டிக் காட்டியுள்ளார். பெண்ணிற்கு ஞானத்தை வைத்தான் ................ சில மூடர் அந்த மாந்தர் அறிவைக் கெடுத்தார் எனப் பாடும் பாரதி பெண்ணிற்கு உரிமை கொடு என முழக்கமிட்டான். அது மெத்தச்சரி.

கணவன் இறந்ததும் பெண்ணும் கணவனுடன் இறக்க வேண்டும்; இதுதான் மதத்தின் பெயரால் நாம் பெண்ணிற்குக் கொடுத்த பரிசு. அவளுக்கு ஆத்மா என ஒன்று உண்டு, அவளால் வாகனங்கள் ஓடமுடியும். இராணுவத்துக்குத் தலைமை தாங்கமுடியும், அரசாள முடியும் என்ற முற்போக்குக் கொள்கைகளைக் காலம் கடந்தே ஏற்றுக் கொண்டது. எமது சமுதாயம் முன்னேறாமைக்குப் பெரும் காரணம் பெண்ணடிமைத்தனமே புருஷன் வீட்டில் வாழப் போகும் பெண்ணே தங்கைச்சி கண்ணே சில புத்தி மதிகள் சொல்லுறன் கேளு கண்ணே என ஒருபாட்டு திருமண விழாக்களில் ஒலிப்பதைக் காணலாம். அதிலே பெண்ணைப்பற்றிக் கவிஞர் சொல்கையில் மாமனாரை மாமியாரை மிதிக்கணும் உனக்கு மாலையிட்ட கணவனையே தினம் துதிக்கணும். சாமக்கோழி கூவையிலே முழிக்கணும், சமையல் வேலை செய்யணும்'' ....... .. எனப் பாடல் தொடர்கின்றது. இப்பாடலில் அர்த்தசாமத்தில் கூடப் பெண்ணுக்கு நிம்மதியில்லா நிலையைக் கவிஞர் வலியுறுத்துகின்றார் அப்படியென்றால் இந்தஜாதிக்கு எப்போதுதான் முன்னேற்றம் வரும்! பாரதி புதுமைப் பெண்ணைப் பாட முன்பு. கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை' மாதராய்ப்பிறப்பதற்கு நல்லமாதவம் செய்ய வேண்டுமய்யா எனப் பாடும் வரை பெண்ணினத்தைப் பெருமைப்படுத்த அவர்கள் உரிமைக்கு குரல் கொடுக்கக் கவிஞர்கள் முன்வரவில்லை. இந்நிலையில் 20ம் நூற்றாண்டில் பெண்களின் நிலை மிகப்பரிதாபமே. பெண்களின் உரிமையை இலங்கைத் தமிழினத்தின் சார்பில் நிலைநாட்ட நாடகக்கலைஞர்கள் உழைத்தனர். அவர்களில் கிருஸ்ணாழ்வார் கலைப்பேரரசு சொர்ணலிங்கம் போன்றோர்பிரதானமானவர்கள் அதன்பின்பு பெண் உரிமை பற்றித் தனது கருத்துக்களை அதிகம் சொன்னவர்களில் முதுபெரும் சிந்தனையாளர் கிழவர் சின்னக்குட்டிக்கு பெரும்பங்கு உண்டு. ராஜாராஜ் மோகன்ராய் உடன்கட்டை ஏறுதலுக்கு எதிராக எத்தனை மைல்கள் நடந்தாரோ அத்தனை தூரம் சீர்திருத்தக் கருத்துக்களை விதைத்துக்கொழும்பு தொடங்கி மலையகம் ஊடாக மட்டக்களப்பு. திருமலை . யாழ்ப்பாணம் வரை சவாரித் தம்பர் நடைபயின்று தனது கருத்துக்களைக் கார்ட்டூன் வடிவில் தனது கருத்துக்களை வழங்கியுள்ளார். சீதனமும் வேண்டும் சிங்கார நாச்சியும் வேண்டும் எனச் சீதனம் கேட்போருக்குச் சாட்டையடி கொடுக்கின்றது சின்னக்குட்டி என்றபாத்திரம் அவர் பெண்ணினத்தைப் பெருமைப்படுத்தியுள்ளார். அவர்களின் ஆந்மா வாழவேண்டும் என்றால் சீதனம் ஒழிய வேண்டும் எனப் பிரச்சார முழுக்கம் செய்தார் ஒரு பெண்ணிற்கு பஸ்சில் இருக்க இடம் கொடுத்து விட்டு அதற்கு பிரதியுபகாரமாக அந்த வாலிபன் மணவறையில் இடம் கேட்பது போல ஒரு கார்ட்டூனைச் சவாரித் தம்பர் வரைந்து உள்ளார். ஆண்கள் எப்படிப்பட்ட சுயநலம் மிக்கவர்கள் என்பதைத் தத்துவரீதியாக அந்தக் கார்ட்டூன் விளக்கி நிற்கின்றது. மனித மனங்களின் உள்ளே ஆழமாக என்ன இருக்கின்றது என்பதை ஊடுருவிப் பார்க்கும் மனோநிலை இக்கார்ட்டூன்: மாப்பிள்ளை தேடித் திரியும் ஒருவர் கடைசியில் சீதனப் பேச்சுக்




சவாரித்தம்பர் கார்ட்டுனிஸ்ட் சி. சிவஞானசுந்தரம் அவர்களால் 1961ம் ஆண்டில் கீறப்பட்ட கார்ட்டூன் இது. இந்தக் கார்ட்டூனை நினைத்தாலே இப்போதும் சிரிப்பு வரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் சரிவராமல் திரும்பி வருகின்றார் அவர் கால் நடையால் தேய்ந்து போன பல சோடிச் செருப்புக்களைக் காட்டும் கார்ட்டூன் மிகப் பெரும் பரிதாபம்!

ஆடு, மாடுகள் போல் மனிதன் தன்னைத்தானே விலைபேசுவது சவாரித்தம்பருக்கு மனதினைப் புழுங்க வைத்தது.

அவர் தனது கார்ட்டூன் ஒன்றிலே மாப்பிள்ளையின் கடைசி விலை என்ன? என்று கேட்கின்றார். தமிழனின் இன்றைய நிலையை இதுபோல் தத்ருபமாக படம் பிடித்துக்காட்டும் கார்ட்டூன்கள் மிகக் குறைவு.

யாழ்ப்பாணத்தில் முக்கியமாகச் சீதனச் சந்தையைவிட மிகமுக்கியமான கொடுமை ஒன்று உள்ளது. அதுவே மாப்பிள்ளைக்குக் கொடுக்கப்படும் இலட்சக்கணக்கான இனாம். ஈகையின் மறுபக்கத்தில் இருக்கும் இந்தக் கண்ணியவான்கள் அவ்வாறு வாங்கியமைக்குக் காட்டும் காரணங்களை வைத்து அவர் கீறிய கார்ட்டூன்கள் சம்பந்தப்பட்டவர்களின் இருதயத்தை வேல் கொண்டு துளைக்கும் வல்லமை வாய்ந்தவை. ஒரு மாப்பிள்ளை சொல்கின்றார், "எனக்கு இனாம் வாங்க விருப்பம் இல்லை; அப்பா விரும்பியதால் வாங்கினேன்." சுயகௌரவம் வாலிபர் மட்டத்தில் எந்தளவு குறைந்து விட்டது என்பதை இந்தக் கார்ட்டூன் மிக நேர்த்தியாக எடுத்து விளக்கியது.

"வாங்கிய இனாம் காசில் ஒரு 50 சதக் குற்றி எறிந்து விட்டுப் போப்பா" என ஒரு வாலிபரைப் பார்த்து ஒரு பிச்சைக்காரன் கேட்கின்றான். இதுவும் ஒரு கார்ட்டூனாக வெளிவந்தது. கௌரவம் அற்ற முறையில் பணம் தேடுபவர்களைக் கௌரவம் குறைந்தவர்களும் இழித்து உரைப்பர் என்பதைச் சொல்லாமல் சொல்லும் இக்கார்ட்டூனைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

சீனத்தின் தலைவர் சன் யாட் - சென், தனது மனைவிக்கு விட்டுச் சென்ற சொத்துக்கள் பற்றிப் பின்வருமாறு எழுதியுள்ளார்· "நான் உடுத்துவதற்காக வைத்திருந்த இரண்டு அங்கிகளை என் மனைவிக்குத் தந்துவிட்டுச் செல்கின்றேன்.; இவை அவளுக்குச் சொத்தாக அல்ல, என் நினைவுப் பொருளாக என்கின்றான் சன் சீனத்தின் முதல் குடியரசுத் தலைவன் அவன்தான்அவன் நினைத்திருந்தால் எவ்வளவோ பொருளீட்டியிருக்க முடியும். எனினும் அவன் மரணப்படுக்கையிலே கிடந்தவை 2 அங்கிகள். அதற்காக அவனது மனைவிமுணு முணுத்துக் கொள்ளவில்லை. தமிழர்களின் நிலை தலைவன் என்றாலும் தொண்டர் என்றாலும் சீதனம் சொத்து என்பதைப் பொறுத்து ஒன்றென்றே சொல்லலாம். மூன்று தலைமுறைக்குத் தேவையான சொத்துக்களைச்

## குறுக்கெழுத்துப் போட்டி இல:2

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 5 | 6 |
| | | | ▒ | | |
| | | | ▒ | | ▒ |
| 19 | | | 22 | | 24 |
| | ▒ | ▒ | | | |
| | | 33 | 34 | | |

ஆக்கம்: மருத் அஹமத் காத்தான்குடி

### இடமிருந்து வலம்

1. நேரத்தைத் தருவது
19. நீர் இல்லாவிட்டால் ஏற்படும்
33. பச்சயமற்ற தாவரம் (மாறியுள்ளது)
34. கடவுள் சிலருக்கே இதைக் கொடுப்பான்

### மேல் இருந்து கீழ்

1. ஒரு கவிஞன்.
2. பள பளக்கும் ஒரு பார்வைப் பொருள். (தலைகீழாக உள்ளது)
3. இது இல்லாமல் காரியமுண்டோ என்ற பழமொழியுண்டு.
5. சப்பலோடு சம்பந்தப்பட்டது (தலை கீழாக உள்ளது)
6. இவளை வர்ணிக்காத கவிஞன் இல்லை.
22. கடலில் பயணம் செய்ய உதவும் ஓர் ஊடகம்
24. ஊதுவது

வாசகர்களே இந்தக் குறுக்கெழுத்துப் போட்டிக்குப் பரிசு அளிப்பவர்கள் மிருணாஸ் ஹோம் டெலிவரி 27, தோமஸ் லேன், மட்டக்களப்பு. வர்த்தக நிறுவனத்தினர். உங்கள் பதில்களைப் பின்வரும் கூப்பன்களுடன அங்கே அனுப்புக. பரிசு பெறும் இரண்டு அதிர்ஷ்டசாலிகட்கு முறையே நூறு ரூபாய் பரிசுகள் உண்டு (ஆர்)

கீழேயுள்ள கூப்பனை வெட்டி அனுப்புக.

குறுக்கெழுத்துப் போட்டி
"மிருணாஸ்" ஹோம் டெலிவரி
27, தோமஸ் லேன்,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்க ஆசைப்படுகின்றான். குடும்பத் தலைவன் அரசியல் பேசி ஆதாயம் அடையத் திரிகின்றான். தலைவன்இடையிலே அதனைத் தாங்கி அலைபவர்கள் மத்தியதர வர்க்கமே. ஒரு பிழையை உணருமிடத்து அதைத் திருத்தாவிடில் நீ இரண்டாவது பிழையைச் செய்கின்றாய் எனச் சீனத்து அறிஞன் கன்பூசியஸ் சொல்லி வைத்தான்.

If Someone Commits a Mistake and Fails to Correct it that Person, has Made a Second Mistake-Confusius அத்தலைவர் சொல்லி வைத்தது போல சமுதாயத்தின் இறக்கம் அச்சமுதாயம் விடும் பிழையால் ஏற்படுகின்றது என அறிந்தால் அதைச் சுட்டிக்காட்டச் சவாரித்தம்பர் தயங்கவில்லை. அதனால் பெண்ணினத்தின் உரிமைக் குரலிலும் சவாரித்தம்பர் தலையிட்டார்.

கோதானம், அன்னதானம், பூதானம் எனப் பல்வேறு தானங்கள் காலத்தின் தேவையை ஒட்டி நடைபெறுகின்றன. 20ம் நூற்றாண்டில் நிலமுள்ளவர்களிடம் இருந்து நிலத்தை அகிம்சை வழியில் பெற்று நிலமற்றோர்க்கு உதவி செய்ய நீண்ட பயணம் அமைத்தார் வினோபாஜி. அதே போன்று தமிழர்களின் மத்தியில் புரையோடிப் போயிருந்த சீதனப் பேயை ஒழிக்கச் சவாரித்தம்பர் 'கார்ட்டூன்' மூலம் மாபெரும் பயணம் செய்தார். புங்குடுதீவில் ஈழத்துச் சிவானந்தன் தலைமையில் சீதனத்தை ஒழிக்கவும், நிலமற்று வீடு இன்றி இருக்கும் கன்னிப் பெண்களுக்கு நிலம் பெற்றுக்கொடுக்கவும் ஒரு அமைப்பு உருவான போது சிரித்திரன் பத்திரிகையில் அதனை வரவேற்று எழுதியவரும் சவாரித்தம்பரே.

பெண்களின் உரிமைகள் பற்றிச் சவாரித்தம்பருக்கு என்ன உணர்வுகள் இருந்தன. என்பதற்கு அவரின் ஆசிரிய தலையங்கங்கள் சான்றாக அமைகின்றன. அவற்றில் ஒன்றினை வாசகர்களின் கவனத்திற்காகத் தருகின்றோம்.

தேர்தல் முடிவு வெற்றியா தோல்வியா எனக் காத்திருக்கும் அபேட்சகர்போல் எனது நண்பன் தனக்குப் பிறக்கப்போகும் குழந்தை ஆணா பெண்ணா என அறிவதற்குப் பிரசவ அறை முன்பு ஆவலாகக் காத்து நின்றார்.

பிரசவ அறைக் கதவு திறக்கும் அரவம் கேட்டது நண்பன். தனக்குப் பிறந்தது. பெண் குழந்தை என்ற செய்தி கேட்டுத் தடாலென என்மீது சாய்ந்தார். சிலகண நேரததின் பின் ''மெயில்வாகனத்தார், களைப்பாயிருக்கு வாரும் ரீ ''குடிப்போம் எனக் ஹோட்டல் ஒன்றுக்குள் அழைத்துச் சென்றார். அங்கு இரு பிளெய்ன்ரீக்கு ஓடர் கொடுத்துவிட்டு ''எனக்கு பெண் குழந்தை பிறந்து விட்டது. இனி மேல் என் குறிக்கோள் Plain Tea and Overtime

## கவிமழை

### - சிரிப் " பை " காட்டுவதேன் -

" செக்கிங் பொயின் " ரில்
புனிதா
" பை " யை
காட்டச் சொன்னால்
ஏன் ?
சிரிப் " பை "
காட்டுகிறாய் ?
" கை " வீசம்மா
கை வீசு
என்றே
உனை பாடி வளர்த்தேன்
நீயோ
புன்ன " கை "
வீசுவதேன் ?
பொம்பளை சிரிச்சா
போச்சு
புகையிலை விரிச்சா
போச்சு
புனிதா
நீ சிரிக்காதே
என் நெஞ்சல்லவா
புகையிது !

- மட்டுநகர்
இரா. தவராஜா

## வாசகர் நெஞ்சம்



சுவைமிகு சுவைத்திரள் ஆசிரியர்க்கு தங்களின் இம்மாத சுவைத்திரள் முன்னைய இதழ்களை விடச் சுவை கூடியதாக இருந்தது. இனிவரும் காலத்திலும் இதைவிட மேலும் சுவையாக இருக்க வேண்டும் என்பது என் வேணவா.

கே. ஜெகதீஸ்வரன்
இல. 12, வி. சி. குவாட்டர்ஸ்
கொட்டகல.

சுவைத்திரள் மார்கழி 93 இதழ் படித்துச் சுவைத்தேன். முதல் வந்த திரள்களை விடச் சுவை குன்றியே காணப்பட்டது. பொங்கல் இதழ் சுவையாக இருக்கும் என நம்புகின்றேன்.

விபுலானந்ததாசன்
50, திருமகள் வீதி,
கல்லடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவையான செய்திகளைத் திரளாகத் திரட்டித் தரும். ''சுவைத்திரளே!'' உன் மார்கழி மாத இதழைக் கண்டேன். அப்பப்பா முன் அட்டையோ பிரமாதம். நாட்டுக் கருடனின் பதில்கள் வியக்க வைக்கும். வித்தியாசமான போக்காகத் தடம் பதித்திருந்தது. மேலும், உங்கள் கடையலும் எமது படையலும் 16ம் ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. கவிஞர் ரீ. எல். ஜவ்பர்கானின் ''ரணங்கள்'' புதுக் கவிதைத் தொகுதியினைப் பற்றிய விமர்சனம் பிரமாதம். புகழ்பெற்ற எழுத்தாளர் (நான் அறிந்த எழுத்தாளர்களுள் என் மனதில் இவரும் தொட்டுச் சென்றுள்ளார்) அன்பு மணியின் ''வரலாற்றுச் சுவடுகள்'' எனும் அவரின் சிறுகதைத் தொகுதியினை விமர்சனத்துக்கு எடுத்துக் கொண்டமை தனித்தன்மை பாராட்டுக்குரியது. கொழும்பு டயரி சுவையாக இருந்தது. மொத்தத்தில் அன்றைய 'சுவைத்திரள்' சூப்பர்.

கலையுள்ளம் மசூந் அஹமத்
இல. 90, மத்திய வீதி,
காத்தான்குடி - 03.

## நடத்து நடத்து ...

சிரிப்புப் பத்திரிகையா நடாத்துகிறாய், தமிழனை நம்பியா? பேஷ் பேஷ் ... சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் உலையப் போகிறாய் ஜாக்கிரதையாக இரு.

வி. கமலாகரன்
அலெக்சாந்திரா றோட்,
வெள்ளவத்தை.

## சுவைத்திரள் வாழ்த்து
### என் அன்புக்குரிய

சுவைத்திரளே சில மாதங்களாகத் தான் நான்
உன்னை தியானிக்கத் தொடங்கியுள்ளேன்.
என்னை மயக்கி விந்தையில் ஆழ்த்தி
சிந்தை மயங்க செய்த உன் விந்தைகள்
என்னவென்று சொல்வேன்
ஒவ்வொரு பக்கமும் எழுத்துகளும்
சொட்டு தேன் துளிகள்...
எனது முகவரி

தங்கவேலு - சந்திரகலா
கிரேஹெட் எஸ்டேட்
உடேஹெந்தன்னை.

(இக்கவிதையை சுவைத்திரளில் வெளியிடுவீர்கள் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

Work தான். சீதனத்துக்குச் சதம் சதமாகச் சேர்க்க வேண்டும். இல்லையென்றால் எமது சமூகத்தில் என் பிள்ளைக்கு வாழ்வே கிடையாது. பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள். ஆனால் தமிழன் சீதனம் கறந்து எடுத்த பின்பு தான் பெண்ணின் கழுத்தில் தாலி கட்டுவான்'' எனத் தமிழ்ச்சமூகம் பற்றிப் பிரலாபித்தார்.

(இன்று பெண்கள் பல கோணங்களில் கவர்ச்சிப் போஸ் கொடுக்காவிடில் சினிமா, சஞ்சிகை, பத்திரிகை என்பன உருவாக்கவே முடியாது என்னுமளவுக்குப் படைப்பாளிகள் மூளை சூனியமாகிவிட்டது. இப்படியான ஆபாசக்குப்பைகளின் முடநாற்றம் எமது வாலிபர்களின் மனதில் பெரும் வியாதிகளை உண்டுபண்ணியிருக்கின்றது. பாடசாலை செல்லும் மாணவிகளிடம் சேட்டை விடுதல், பெண்களைக் கடத்திக் கொண்டு போதல் எல்லாம் இன்று சாதாரண பத்திரிகைச் செய்திகளாகி விட்டன. எமது சுதந்திர பூமியில் இன்று பெண்கள் தனிமையாகச் செல்வது விபரீத விளைவுகளை உண்டுபண்ணுகின்றது. என்-எஸ் கிருஸ்ணனின் ஐம்பதும் அறுபதும் என்ற நாடகத்தில் அர்த்தசாமத்தில் ஒரு இளம் பெண் நகைகளுடன் வருகின்றாள். இதைப் பார்த்து ஏங்கிய மதுரம் 'ஏனம்மா இந்தப் பயங்கரமான காலத்தில் ஒரு பெண் தனியே வரலாமா,,? என்று கேட்கின்றாள். அதற்கு என்.எஸ்.கே எந்த நாட்டில் ஒரு பெண் அர்த்த சாமத்தில் பயமின்றிப் போகின்றாளோ அங்குதான் பூரண சுதந்திரம் நிலவுவதாகச் சொல்கின்றார். கொடுமெவறி காமம், என்பது மனிதனின் மனோவியாதிகளில் ஒன்று. இதற்கு இரையாவது அப்பாவிப் பெண் இனம் தான். இன்றைய மர்ம நாவல்களின் அட்டைப்படம் எல்லாம் இந்த நோயின் வெளிப்பாடே. இப்படியான மர்மநாவல்கள் பரப்பியுள்ள புத்தகக் கடையில் நிற்கும் போது பெண்கள் கொலை செய்யப்பட்ட இரத்தக் களரிக்குள் நிற்பது போன்ற பீதியே ஏற்படுகின்றது.

நம்மை வாழவைக்கும் ஜீவநதிகளுக்குப் பெண்களில் பெயரைச் சூடிப் பூஜிக்கின்றோம், நாம் பிறந்த நாட்டைத் தாய்நாடென்றும் பேசும் மொழியைத் தாய்மொழியென்றும் தாய்க்குலத்துக்கு மேன்மையான இடம் அளித்துள்ளோம். சக்தியின்றிச் சிவன் இல்லை; சிவன் இன்றிச் சக்தி இல்லை என்ற அர்த்த நாதீஸ்வரர் ரூபத்தில் தத்துவம் கண்டது தமிழ். இனம் வீரம், செல்வம், கல்வி ஆகியவற்றிற்குப் பெண் தெய்வங்களை உபாசிக்கும் இந்த நவராத்திரி வேளையில் நாமெல்லாம் பெண் இனத்தை உயர்வாக மதிக்கும் விரதம் பூணுவோமாக.

- சவாரித்தம்பர்
நம்பர்

---

பெண்களின் நிலை சம்பந்தமாக சவாரித்தம்பரால் கீறப்பட்ட கார்ட்டூன்கள் சில அடுத்த இதழில் இடம்பெறும்

---

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேனா நண்பர்கள்




பல ரசிகர்களின் வேண்டுகோளிற்காக இப்பகுதி பிரசுரமாகின்றது. பேனா நண்பர் பகுதியில் தமது பெயர் விலாசம் இடம்பெற விரும்புவோர் சுவைத் திரளுக்குத் தமது பெயர் விலாசங்களை அனுப்பி வைக்கவும்.

( ஆ + ர் )

பெயர்:- கோட்டைமுனை வாகிட் ஏ. குத்தூஸ்
( தங்கதாசன் - முத்துமணி )
விலாசம்:- இல. 28, தேவாலய வீதி,
பதுளை.
பொழுது போக்கு ;- வழக்கமான பொழுது போக்குகள்.

★

ரீ. சிவநாதன்
அரசடித்தீவு வடக்கு
கொக்கட்டிச்சோலை.
பொழுது போக்கு:- கதை நூல்கள் வாசித்தல், விளையாட்டு, சமூகசேவை.

★

கே. ஜெகதீஸ்வரன் ( மாணவன் )
இல. 12, வி. சி. குவாட்டர்ஸ்,
கொட்டகல.
பொழுது போக்கு:- புத்தகம் படித்தல், சமூகசேவை விளையாட்டு.

★

மா. மகேந்திரன்
இல. 27, வன்னியனார் வீதி,
மட்டக்களப்பு.
பொழுதுபோக்கு: விளையாட்டு, பத்திரிகை படித்தல், சினிமாப் படம் பார்த்தல்

## பாடுங்கள் நகைச்சுவைக் கவிதை




அன்பின் வாசகர்களே......

இம்மாதம் மேலேயுள்ள படத்துக்கு நகைச் சுவைக் கவிதை பாடுங்கள். பரிசு பெறும் நாலு கவிதைகட்கு முறையே 50/- ரூபா வீதம் பரிசு உண்டு. கீழேயுள்ள முகவரியை வெட்டி அனுப்புங்கள்.

நகைச்சுவைக் கவிதை
சுவைத்திரள்
105/1, திருமலை வீதி,
மட்டக்களப்பு.


### ரெடிமேட் சென்ரர்

ஆள் பாதி! ஆடை பாதி!
இது தமிழ்ப் பழமொழி
அழகுக்கு அழகுதரும் ஆடைகள் எம்மிடம் உண்டு.

★ சேட்டிங் ★ சூட்டிங் ★ சிறுவர் உடைகள் ★ சாறிகள் ★ பிளவுஸ்கள் ★ வேட்டிகள் யாவற்றுக்கும்,

### ரெடிமேட் சென்ரர்

2, திருமலை வீதி,
மட்டக்களப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சென்ற இதழில் இப்படத்துக்கு ஒரு நகைச்சுவைக் கவிதை எழுதுமாறு வாசகர்களைக் கேட்டிருந்தோம். நூற்றுக்கணக்கான கவிதைகள் எமக்குக் கிடைத்தன. அவற்றில் தரமான கவிதைகளை வாசகர்கள் முன் படைத்திருக்கின்றோம். ஆர்வமுடன் கலந்து கொண்ட கவிஞர்கட்கு எமது பாராட்டுதல்கள். இவர்கட்கு வெகுமதி விரைவில் அனுப்பி வைக்கப் படும்.

( ஆ + ர் )

## நகைச்சுவைக் கவிதை 1

தம்பியடா கண்ணுறங்கு !
காலமதைத் தவறவிட்டால்,
ஞாலமதில் உறக்கம் இல்லை.
பிறக்கும் போதே நீயொரு கடனாளி.
உலக வங்கிக்கு நீயொரு கடனாளி.
பன்னிரண்டு ரூபாவுக்கு நீயொரு கடனாளி.
இலங்கை வங்கியில் உன் வீடு ஈடு
அந்த வங்கிக்கு அப்பா ஒரு கடனாளி
காசில்லா அம்மாவை கலைத்து விட்டார் தாய் வீடு:
ஆட்டுகின்றேன் ஆயா ஏணையை ஆட்டா ராஜா ஆட்டம்!

கண்மணியே கண்ணுறங்கு
காலை வரை கண்ணுறங்கு
கால் முளைத்து நடந்து விட்டால்
காலடியில் மிதி வெடிகள்
களனியிலே நடந்து சென்றால்
காத்திருக்கும் பொறி வெடிகள்
ஆனதனால் கண்ணுறங்கு !

வளர்ந்து விட்டால் வேலை இல்லை.
வேலை இல்லா மாப்பிள்ளைக்கு,
பொண்ணுமில்லை இந்த ஊரில்
பேசாமல் கண்ணுறங்கு காலமதைத்
தவறவிட்டால் நிம்மதிக்கும் தூக்கம் இல்லை.

வீட்டில் இருந்த கஜு மரங்கள்
வெட்டி வித்தார் உன் அப்பனாரு!
பின் வளவில் இருந்த பனைகள்
எல்லாம் செல்லடியில் சேதமாச்சு!
கட்டி வைத்த வீடு எல்லாம்
பொம்பரினால் மட்டமாச்சு!
கொழும்பு போன அப்பாவும் 'ரவுண்ட்'
அப்பிலே 'லொக்' அப்பு
ஆனதனால் கண்ணுறங்கு
அப்பா வந்திடுவார் கண்ணுறங்கு,

- கல்லடிக் கதிர்காமு -

★

## நகைச்சுவைக் கவிதை 2

ஆராரோ பாட இப்போ
அம்மா இல்லை......!
அகதி சாமான் கியூவில்
அதிக கிரவுட் போல...!
அப்பாவை நான் பார்த்து
அதிக காலம்... !
அவர் கூட வெளிநாட்டில்
அகதிதானாம்......!
எட்டி எட்டிப் பார்க்கிறேன்
உலகை இப்போ!
எல்லாமே அழகாத்தான்
இருக்குது இப்போ !
ஆனாலும் நான் இப்போ
அகதியில்லை...!
அம்மாவின் சேலையிலே
தூங்கும் மட்டும் !

எஸ். ஸ்ரீதரன் (அமிர்ஸ்ரீ)
66/2, சந்தை ஒழுங்கை,
மட்டக்களப்பு.

★

## பாராட்டுப் பெறும் கவிதைகள்

## நகைச்சுவைக் கவிதை 3

அகதிமுகாம் தனக்கு
ஆள் ஒன்றைக் கூட்டுதற்கு
புளுதியிலே நீ வந்து
பிறந்தாயோ தமிழ் மகனே

ந. கருணாகரன் 'திருப்பதி'
ஆரையம்பதி.

★

## நகைச்சுவை கவிதை 4

குறுநெல் கஞ்சிதனில்
குருவியாய் சேர்த்தெடுத்த
அன்னையவள் உதிரத்தை
உதையிட்டு உணவாக்கி
அன்புத் தந்தையவன்
அரிதான துண்டதனை
வஞ்சித்துத் தொட்டிலாக்கி
மஞ்சத்திலா உறங்குகிறாய்
மகானாகும் பையனே நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரசு அக்காவுக்கு
ஓராம் ஆண்டதனில்
இலங்கை அரசு தந்த
இலவசப் புத்தகத்தை
இதழாகக் கிழித்தெடுத்து
இடுப்பின் கீழ் ஈரத்தில்
இதமாக வைக்க வைத்து
தூளியிலா தூங்குகிறாய்
துக்கிரிப் பையனே நீ

- கா. யோகேந்திரன் துளசி -
ஆரையம்பதி - 2.

★

### நகைச்சுவைக் கவிதை 5

உறங்குறங்கு என் குரங்கே - அழுதால்
உதைத்திடுவேன் நீ உறங்கு!
சவூதியில் அம்மா தூங்க - நீ
சேலைக்குள் இங்கே தூங்க!
சிவாய நான் எங்கே தூங்க - ஒரு
சித்தியை நான் எங்கே வாங்க?
- உறங்குறங்கு

சீதனமாய்ப் பெற்றதெல்லாம் - நான்
'சீல்', வடி என்றழித்தேன்:
ஆதலினால் அவள் பறந்தாள் - என்னை
அடியோடு அவள் மறந்தாள்
- உறங்குறங்கு

கு. திருமால் அமிர்தகழி,
மட்டக்களப்பு



சிரிப்பு அகராதி

நில நடுக்கம்

கடவுள் வைத்த கண்ணிவெடி!


★ T. V. வேண்டுமா?
★ றேடியோ வேண்டுமா?
★ அழகு சாதனம் இல்லை என்ற கவலையா?

WAHLS Shopping Centre
152, Bankshall Street,
COLOMBO-11. T. P. 446023


## தமிழ்ப் புதல்வி பண்டிதை

# கங்கேஸ்வரி கந்தையா

## பெயருக்கேற்ற நற்பணி புரிந்த அம்மையார்



"அருள்மொழி அரசி" "பெருஞ்சொல் அமுதம்" "இலக்கியமணி" "சைவநன்மணி" சிவப்பணி அம்மையார் முதலிய பட்டங்களைப் பெற்ற தமிழன்னை பண்டிதை கங்கேஸ்வரி கந்தையா அம்மையார் அண்மையில் அமரத்துவம் அடைந்தார். பெயருக்கேற்ப நற்பணி புரிந்த இப்பெண்மணி பெரிய வெற்றிடம் ஒன்றை விட்டுச் சென்றுள்ளார்.

1917ம் ஆண்டு பங்குனி மாதம் 20ம் திகதி மட்டக்களப்பிலே பிறந்த அம்மையார் இளமை முதல் தமிழிலும் சைவத்திலும் மிகுந்த ஆர்வம் காட்டியவர். ஆசிரிய கலாசாலை தமிழ் விரிவுரையாளராக, மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றத் தலைவியாக, பக்திச் சொற்பொழிவாளராக இலக்கிய ஆய்வாளராக அவர் புரிந்த பணிகள் பன்முகப்பட்டவை. அடக்கமாக ஆனால் ஆழமாக அவர் செயற்பட்டார். தன்னுள் நிறைந்திருந்த ஆத்மீகப் பலத்தால் மக்களைக் கவர்ந்தார். அவர் தம் உள்ளத்தில் நிறைந்தவர்.

### பண்டிதர் பரீட்சையில் சித்தி

தமது இலக்கிய புலமையினால் பிற்காலத்தில் பண்டிதர் பரீட்சையிலும் சித்தியெய்தி பண்டிதை ஆனார். இவருடைய காலத்தில் பெண் கல்வி ஓரளவு தான், சமூகத்தில் முனைப்பாக இருந்தது. கிழக்கிலங்கையில் பண்டிதை பட்டம் பெற்ற பெண்கள் மிகச் சிலரே. அவர்களுள் இவர் முன்னோடியாக கணிக்கத்தக்கவர். இத் தகைமையினால் இவருக்கு மட் / ஆசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளர் பதவி கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் விரிவுரையாளர் பணி

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையில் பண்டிதர் பூபாலபிள்ளையின் மறைவுக்குப் பின், அவரது பொறுப்பிலிருந்த தமிழ் விரிவுரையாளர் பொறுப்பை ஏற்று மிகத் திறமையுடன் தனது கடமைகளை ஆற்றிய இவர் எண்ணற்ற ஆசிரிய மணிகளையும், தமிழ் மணிகளையும் உருவாக்கினார். அவர்களைத் தனது சொந்தக் குழந்தைகள் எனக் கருதி அன்பைப் பொழிந்தார். அதனால் மாணவ மாணவிகள் தமது சொந்த அன்னையாகவே கருதி அவர் மீது பக்தியும் மரியாதையும் வைத்திருந்தனர். இவருக்கு விருதுகள் கிடைக்கும் போதும், அவரது நூல்கள் வெளியீடுகளின் போதும் ஆசிரிய கலாசாலை விழாக்கோலம் பூண்டு நிற்கும்.

## இலக்கியத் தம்பதிகள்:

இவருடைய கணவர் பண்டிதர் வித்துவான் வீ. சீ. கந்தையா B. O. L. அவர்கள் பழம்பெரும் தமிழறிஞர். ' மட்டக்களப்பு தமிழகம் ' ''கண்ணகி வழக்குரை '' மட்டக்களப்பு சைவக் கோயில்கள் 1, மட்டக்களப்பு சைவக் கோயில்கள் II, பாஞ்சாலி சபதம், மட்டக்களப்பு நாட்டுப்பாடல்கள் போன்ற பாரிய நூல்களை தமிழ் உலகிற்களித்தவர். கால் நூற்றாண்டுக்கும் மேலாக தமிழ் ஆசிரியராகவும், அதிபராகவும் பணிபுரிந்து அறத்தொண்டாற்றியவர்.

இருவரும் இணைந்து ஈழத்தின் பல பாகங்களிலும், ஈழத்துக்கு வெளியே கடல் கடந்த தமிழ் நாடுகளிலும் பெரும் சொற்பெருக்காற்றிப் பேரும் புகழும் பெற்றவர்கள்.

தமது கணவரின் இலக்கிய முயற்சிகள் யாவற்றிலும் உந்து சக்தியாக உடனிருந்து உதவியவர் பண்டிதை அவர்கள். ஈழத்து ஆலயங்களிலும் சைவப் பெருமன்றங்களிலும், இலக்கிய மன்றங்களிலும் சிறந்த உரைகளை ஆற்றி மனதில் இடம் பிடித்தவர்கள். தமிழகத்தில் சென்னை, மதுரை, திருச்சி முதலிய இடங்களிலும் மலேசியாவிலும் இவர்களது உரையைக் கேட்டவர்கள் '' செந்தமிழ் '' என்றால் என்ன என்பதை இதயபூர்வமாக உணர்ந்தனர். பேச்சிலும், எழுத்திலும் இனிமை கொட்டும் தமிழ் நடை இவர்களுடையது.

## வெளியிட்ட நூல்கள்

கங்கேஸ்வரி அம்மையார் தனது கணவனைப் போல பாரிய நூல்கள் வெளியிடா விட்டாலும் இரண்டு முக்கிய நூல்களை எழுதி வெளியிட்டு முத்திரை பதித்துள்ளார். ''அரசன் சுளையையும் ஆடக சவுந்தரியும்'' என்று இரு ஓரங்க நாடகங்களை இணைத்து இவர் வெளியிட்ட இந்நூல் இலங்கையின் சாகித்திய பரிசினைப் பெற்றது ''தேவி தோத்திரத் திரட்டு'' என்னும் ஒரு நூலையும் இவர் தொகுத்துள்ளார்.

தமது கணவர் மறைவுக்குப் பின்னர் ''மட்டக்களப்பு சைவக் கோயில்கள் - II என்ற நூலை இவரே வெளியிட்டார். '' மட்டக்களப்பு தமிழகம் '' என்ற நூலை மறுபதிப்பு செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போதே அமரத்துவம் அடைந்தது கவலைக்குரியதே.

## பெற்ற விருதுகள்

பண்டிதை பட்டம் பெற்ற இவரது தமிழ், சைவப் பணிகளை கௌரவிக்கும் வகையில் அருள் மொழி அரசி (யாழ் நல்லை ஆதினம்) பெருஞ்சொல் அமுதம் (காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதினம்) இலக்கிய மணி (மட் - கலாசாரப் பேரவை) சைவ நன்மணி (இந்து சமய கலாசார அமைச்சு) சிவமணி அம்மையார் முதலிய விருதுகளும் இவருக்கு வழங்கப்பட்டன.

இவ் விருதுகளை விடக் கங்கேஸ்வரி அம்மை, கங்கேஸ்வரி அக்கா எனத் தமிழன்பர்களால் அழைக்கப்படும் போது இவர் மகிழ்ந்து போவார்.

## பிறதமிழ்ப் பணிகள்

தமதுகுடும்பக் கடமைகளுக்கு மத்தியிலும் தமிழுக்கும், சைவத்திற்கும் இவராற்றிய பணி அளப்பரியது. மட்டக்களப்பு, மதுரை முதலிய இடங்களில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மகாநாடுகளில் ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற அனைத்துலக இந்து சமய மகாநாட்டிலும் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார். மட்டக்களப்பில் 3 நாட்கள் தொடர்ந்து நடைபெற்ற திருமுறை மகாநாடு போன்றவற்றில் பல நிகழ்வுகளை ஒழுங்கு செய்தார்.

கங்கேஸ்வரி அம்மையாரை நேரில் பார்ப்பவர்கள் புனிதவதியார், திலகவதியார், மங்கையர்க்கரசியார் போன்றோர் இப்படித்தான் இருந்திருப்பார்களோ என எண்ணத் தோன்றும் அவரது தோற்றம் உண்மையில் அவரது அகத்தின் அழகே ஆகும். பக்திச் சொற்பொழிவுகளில் மக்களைக் குளிப்பாட்டி அவரே ஒரு பக்திப் பழமாகக் காட்சி அளிப்பார். பேச்சோடு மட்டும் போகாமல் வாழ்ந்தும் காட்டிய பெண்மணி.

இலக்கிய மேடையிலும் அவர் ஆற்றும் உரைகள் '' பெருஞ் சொல் அமுதம் ஆக அமையும், தமிழுக்கும் சைவத்திற்கும் பெரும் பணி புரிந்த அம்மையாரின் இறுதி மூச்சு தமது கணவரின் மட்டக்களப்பு தமிழகம் '' என்னும் நூலினை மறுபதிப்பு செய்வதே ஆகும். அம்முயற்சி கை கூடுவதற்குள் இறைவன் அவரைத் தம்முடன் அழைத்துக் கொண்டார். மட்டக்களப்பு தமிழகம் மீண்டும் மலர தமிழ் பேசும் நல்லுலகம் உதவட்டும். அவர் ஆத்மா சாந்தியடைக.

செல்வி க. தங்கேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கலடியில்.....

**தரமான பல சரக்குப் பொருட்கள்**
**மொத்தமாகவும், சில்லறையாகவும்**
**வாங்குவதற்கு உரிய இடம்:**

## மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்

**மெயின் வீதி, செங்கலடி.**

---

**அம்பிகா..... அம்பிகா..... அம்பிகா..... என்பதே எங்கும் பேச்சு**

★ அழகுக்கு அழகு தரும் அற்புத நகை மாளிகை
என்றால் அது அம்பிகா தான்.
22 கரட் தங்க நகைகள் கண்கவர் வண்ணங்களில்
எம்மிடம் உண்டு.

# அம்பிகா ஜுவலர்ஸ்

இல. 52 C, மெயின் வீதி,
செங்கலடி.

---



ஒருத்தி: அக்கா எங்கே போய்க் கொண்டிருக்கின்றாய்......?
மற்றவள்: ஓ ... அதுவா ..... அழகுக்கு அழகு தரும்
**நியூ புஸ்பா நகைமாளிகைக்கு.....**
ஒருத்தி: அது எங்கே அமைந்திருக்கின்றது
**மட்டக்களப்பு இரண்டாம் குறுக்குத் தெருவில்......**
ஆமாம்..... தரமான தங்க நகைகளின் காப்பகம்
**நியூ புஸ்பா ஜுவல்லர்ஸ்கே...**

## நியூ புஸ்பா

37, 2ம் குறுக்குத் தெரு, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோனலிசாப் புன்னகையே...
சித்திரங்களில் பெருமையானது.
ஆனால்
↓
**மோகனா ஜுவல்லர்ஸ்** நகைகளே
இன்று மட்டுநகர் மாவட்டத்தில்
மேன்மையானது



“ அந்தப் பெருமையான நகை மாளிகை எங்கே உள்ளது ”
“ ஓ... அதுவா அது... சுப்பர் மார்க்கட் செங்கலடியில் உள்ளது
நகை மாத்திரம் அல்ல......
அடவு பிடிக்கும் நிலையமும் அங்கே உள்ளது.

22 கரட் தங்க நகைகள் ★ அட்டியல் ★ செயின்
★ மோதிரம் ★ சங்கிலி ★ கற்கள் பதித்த நகைகள்.
ஆகிய சகல நகைகட்கும் இன்றே விரைந்து வருக.

# மோகனா ஜுவல்லர்ஸ்

சுப்பர் மார்க்கட், செங்கலடி.



இச்சஞ்சிகை 105/1ல் வசிக்கும் திக்கவயல் சி. தர்மகுலசிங்கம் அவர்களிற்காக, தொகுப்பாசிரியர் மட்டுநீர்ராம் அவர்களால் வெளியிடப்பட்டது. ஓவியர் ஸ்ரீகோவிந்த், அச்சுப்பதிப்பு: வளர்மதி அச்சகம், இல. 28, லொயிட்ஸ் அவனியூ, மட்டக்களப்பு. சுவடிக்கூடத் திணைக்களத்தில் சஞ்சிகையாக பதிவு செய்யப்பட்டது. பதிவிலக்கம் Registered as a Newspaper in Sri Lanka. RBN/ 4 / 3 / 84